REGISTERED AS A CATHOLIC WEEKLY (P.197) ESTABLISHED 19 FEB. 1876

# பாதுகாவலன்

PATHUKAVALN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

மலர் 125
இதழ் 16
15 கார்த்திகை 2001
பக்கங்கள் 8
விலை ரூ.5

UNIVERSITY OF JAFFNA LIBRARY 15 DEC 2001 PERIODICALS DIVISION

# இலங்கையிலுள்ள பல்வேறு இனங்களின் ஐக்கியத்தையும் சமரசத்தையும் கட்டியெழுப்பியவர் ஜோசவ்வாஸ் முனிவர்

## கோவை மறைமாவட்டக் குருக்களுக்கு நடந்த ஞானொடுக்கத்தில் கண்டி ஆயர் வியான்னி பெர்னான்டோ ஆண்டகை

''முத்திப்பேறு பெற்ற ஜோசவ்வாஸ் முனிவரை ஐக்கியத்தின் பணியாளர் எனக்கூறலாம். இலங்கையிலுள்ள பல்வேறு இனங்களுக்கிடையில் அவர் பல்வேறு சமூக மக்களுடன் உறவாடினார். அவர்களுடைய மொழிகளைக் கற்றார். கண்டிய மன்னனாக இருந்தாலென்ன, சாதாரண ஏழையாக இருந்தாலென்ன, சமூகத்தின் எல்லா மட்டத்தினரோடும் இலகுவாகப் பழகினார். பௌத்த குருக்களோடும் அவர் நட்புறவு கொண்டிருந்தார்.

இவ்வாறு கண்டி ஆயர் வியான்னி பெர்ணான்டோ அவர்கள் கோவை மறைமாவட்டக் குருக்களுக்கு நடந்த ஞானொடுக்கத்தில் ஜோசவ்வாஸ் முனிவரின் ஆன்மீகம் பற்றி உரையாற்றுகையில் கூறினார். அக்டோபரில் நடந்த இந்த ஞானவொடுக்கத்தில் 40 குருக்களும் கோவை பேராயர் கொண்சால்வேஸ் அவர்களும் பங்குபற்றினர்.

ஆயர் வியன்னி ஜோசவ்வாஸ் முனிவரது ஆன்மீகத்தை அவரது தாழ்ச்சி, சுதேச பண்பாட்டை அவர் கையாண்டமை, தேவதாய் மீது அவர் கொண்ட பக்தி ஆகிய நான்கு தலைப்புக்களில் எடுத்து விளக்கினார்.

ஞானொடுக்க முடிவில் ஜோசவ்வாஸ் முனிவர் வாழ்ந்து இலங்கைக்குப் புறப்பட்ட ஒறட்டறி கட்டிடத்திலிருந்து அற்புத சிலுவைக் கோயிலுக்கு 2மணித்தியால சிலுவைப் பாதையும் முடிவில் திருப்பலியும் இடம்பெற்றன. இறுதியில் பங்குபற்றிய குருக்கள், ''இந்தக் கோவை தலத்திருச்சபையில் நாம் விசுவாசிகளுக்குப் பணிபுரியும் போது இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள தலத்திருச்சபைகளில் பணிபுரிய நாம் பெருந்தன்மையோடு செல்லும் போதும் எங்கள் கோவையின் குருவும் இலங்கையின் அப்போஸ்தலருமான முத்திப்பேறு பெற்ற ஜோசவ்வாஸ் முனிவரின் வீரச் செயல்களளை நடைமுறையில் பின்பற்ற எமக்கு அருள் புரிந்தருளும்'' என்ற வாக்குறுதியை எடுத்தனர்.

## உலக சவால்களுக்கு எதிர்நீச்சல் போட்டு உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ்வது பொதுநிலையினரின் கடமையாகும்

இவ்வாறுயாழ் மறைமாவட்ட பொது நிலையினர் ஆணைக்குழு இயக்குனர் R.H. சகாயநாயகம் பொது நிலையினர் தினத்தை யொட்டிய தனது அறிக்கையில் தெரிவித்தார். அதன் விபரம் வருமாறு:

திருச்சபையில் பெரும் எண்ணிக்கையாயிருப்பவர் பொது நிலையினர். திருமுழுக்கின் வழியாக திருச்சபையின் உறுப்பினராகும் அனைவரும் திருச்சபையில் ஈடுபட அழைக்கப் படுகின்றனர்.

கிறிஸ்து எவ்வாறு முப்பணிகளின் வழியாக இறை அரசை இவ்வுலகில் அமைத்தார். இறை மக்களும் திருமுழுக்கின் மூலம் கிறிஸ்துவின்; ஓர் உடலாக்கப்பட்டு இறைமக்களாக உருப்பெறுகின்றனர். தங்களுக்கு உரித்தான முறையில் கிறிஸ்துவின் குருத்துவ, இறைவாக்கு, அரச பணிகளில் பங்குகொள்ளுகின்றனர். இன்னும் சிறப்பாக உலகத்தின் மத்தியில் ஆற்ற வேண்டிய மகத்தான பணி பொதுநிலையினரைச் சிறப்பாக சார்ந்தது. "உலகை சார்ந்திருக்கும் பண்பு பொது நிலையினருக்கு உரியதும் தனிப்பட்ட விதத்தில் அவர்களை சார்ந்ததாகும்." (திருச்சபை எண்31) எனவே உலக காரியங்களில் ஈடுபட்டு உழைக்கும் பொது நிலையினர். அவற்றை இறைவனின் திட்டப்படி நெறிப்படுத்துவதன் மூலம் இறை அரசை அமைப்பது அவர்களின் பிரத்தியேகபணியாகும்.

உலகத்தின் பல தளங்களில் முற்றும் முழுதும் ஈடுபடும் வாய்ப்பும் வசதியும் உள்ளவர்கள் பொது நிலையினர். எல்லாத் துறைகளிலும் அவர்களின் ஈடுபாடு கிறிஸ்துவின் சாட்சியாக வாழ அழைப்பு விடுக்கின்றது. அன்பு, சமத்துவம், மன்னிப்பு, உண்மை, நேர்மை போன்ற பண்புகளைத் தங்கள் சூழலில் கடைப்பிடித்து அடுத்தவர்க்கு சாரமுள்ள உப்பாக, குன்றில் ஏற்றப்பட்ட தீபமாக விளைய அழைப்புத் தரப்பட்டுள்ளது.

எனவே போரின் கெடுபிடிகள், தேர்தல் குளறுபடிகள், போலி வாழ்க்கை முறைகள் இவற்றின் சவால்களுக்கு எதிர்நீச்சல் கொடுத்து கிறிஸ்துவை என்றும் நிலைநாட்டும் பிரதிபலிக்கும் உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ்வது பொது நிலையினரின் கடமை என்பதை பொது நிலையினரின் நாளில் உணர்வார்களாக.

## குருநகர் யாகப்பர் ஆலய குண்டு வீச்சு 8ஆவது ஆண்டு நினைவு தினம்

1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீது சிறீலங்கா வான்படை குண்டு வீச்சு விமானம் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட மக்களின் 8ஆவது ஆண்டு நினைவு தினம் இம் மாதம் 13ஆம் திகதி யாகப்பர் ஆலயத்தில் நினைவு கூரப்பட்டது.

அன்றைய நாள் முழுவதும் துக்க தினமாகவும் உபவாச தினமாகவும் குருநகர் மக்களால் நினைவுகூரப்பட்டது.

அன்றைய தினம் காலை 5 மணிக்கும் பின்னர் குண்டு வீச்சு நிகழ்ந்த நேரமாகிய காலை 7.25 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் மாலை 4.30 மணிக்கும் ஆலயத்தில் துக்க மணி அடிக்கப்பட்டது. தொடர்ந்து நினைவு தின வழிபாடும், இரங்கல் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பங்குத் தந்தை ஜெயசேகரம் அவர்கள் தமது உரையில் பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தினார்.

- பங்கின் நினைவுகளை தூய் மைப்படுத்தி இனியும் நிக ழக்கூடாது நீதியான சமுதாயம் உருவாகவேண்டும்.
- தமிழ் – சிங்கள பகைமை நிலைகள் தூய்மைப்படுத்தப்பட்டு தனித்துவத்தின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்
- தமிழ் சமுதாயத்தில் புரையோடியுள்ள சமூக வேற்றுமைகள் காலம் காலமாக ஊறிய சாதிய நிலைகள் தூய்மைப்படுத்தவேண்டும்.

இவ்வழிபாட்டைத் தொடர்ந்து பங்குத்தந்தை ஜெயசேகரம் அடிகளால், யேர்மன் ஆன்மீகப் பணியகத்தின் தயாரிப்பில் உருவான "மங்கள மேகம்" என்ற ஒலி நாடாவும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதற்கான மதிப்புரையை அருள்திரு. செ. அன்புராசா வழங்கினார்.

## "நான் நடமாடும் கிறிஸ்துவின் புத்தகம்"

### கோப்பாய் புனித சூசையப்பர் ஆலயத்தில் யாழ். ஆயர்

நாம் பெற்றுக்கொண்டதை பகிர்ந்து சாட்சிகளாக வாழ வேண்டும். ''உலகெங்கும் சென்று அனைவரையும் சீடராக்குங்கள் என்ற இறைமகன் யேசுவின் வார்த்தையை வாழ்வாக்க எமது சொல், செயல்கள் மறை வாழ்வு உதவவேண்டும். நமது விசுவாசத்தை பகிரும்போது நம் விசுவாசம் சுவாலித்து நெருப்பாக எரியும்.

இவ்வாறு28.10.2001 அன்று கோப்பாய் புனித சூசையப்பர் ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பலி ஒப்புக்கொடுத்து சிறப்பித்த யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தெரிவித்தார்.

''80வருடங்களுக்கு முன்னர் சுவாமி ஞானப்பிரகாசர். இம் மண்ணில் போதித்து வளர்த்த திருமறையை வளர்ப்பது திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரது கடமையாகும். பிறமத மக்கள் உங்கள் வாழ்வு மூலமாக கிறிஸ்துவின் சாயலை பார்த்துப் படிக்கின்றனர். நீங்கள் கிறிஸ்துவின் சாட்சிகளாய் ஏனையோர் படிக்கும் சிறந்த வேதாகமமாய் வாழுங்கள்'' என்றார்.

## பொதுநிலையினர் தினம்



"நீங்கள் மனுக்குலத்திற்கு உப்பாயிருக்கிறீர்கள்" மத்.5:13

**25.11.2001**

## இயேசுவைப் போன்று உயிரையும் அர்ப்பணிக்க வேண்டி வரலாம்

ஐப்பசித் திங்கள் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் திருமலை–மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் தலைமையில் "சமாதானத்துக்கு கை கொடுப்போம்" என்ற கருத்தரங்கு எகெட் நிறுவன ஆதரவில் குருக்கள் அருட்சகோதரிகளுக்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய அருள்திரு அலெக்சான்டர் குருக்கள் துறவியர் அனைவரும் விசேட விதமாக கிறிஸ்துவின் இறைவாக்கு உரைக்கும் பணியில் பங்கேற்க அழைக்கப்பட்டிருக்கின்றனர் எனவும், இறைவாக்குரைத்தல் என்பது இறை வார்த்தையின் ஒளியில் தற்கால, நாம் வாழும் சூழ்நிலையை புரிந்துகொண்டு அமைதியின்மைக்கான காரணங்களை இனங்கண்டு சமாதானத்துக்காக எம்மையே முற்றாக, முழுமையாக அர்ப்பணித்தலாகும். இறைவாக்குரைக்கும் பணியில் ஈடுபடுபவர்கள் இயேசுவைப் போன்று உயிரையும் அர்ப்பணிக்க வேண்டியநிலை வரலாம் எனச் சவால் விடுத்து தம் உரையினை நிறைவு செய்தார். அதனைத் தொடர்ந்து கருத்துப் பரிமாற்றம் இடம் பெற்றது.

## கொழும்பு மறைமாவட்டத்தில் 629,173 கத்தோலிக்கர்

2001ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பின்படி கொழும்பு மறைமாவட்டத்தில் 629,173கத்தோலிக்கர் உள்ளனர். இவர்களுள் 208,382 பேர் கொழும்பிலும் 223, 804 பேர் றாகமையிலும் 196,987 பேர் நீர்கொழும்பிலும் ,வாழ்கின்றனர். எனக் கணிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

### துன்புறும் திருச்சபை

கருதினால் நியூமன் தமது கவிதையொன்றில் மரணமடைந்து தன் காவற்தூதரால் உத்தரிப்பு ஸ்தலத்துக்கு அழைத்துச் செல்லப்படும் ஓர் ஆன்மாவை எம் கண் முன்னே காட்டுகிறார். அத் துன்பகரமான ஆயினும் தூய இடத்தின் வாயிலை அடைந்ததும் தூதர் அவரை விட்டுப் பிரிகையில் நம்பிக்கையூட்டும் இவ்வார்த்தைகளைக் கூறுகிறார். ''மண்ணுலகின் திருப்பலிகளும் விண்ணுலகின் பரிந்துரைகளும் நீர் உன்னத இறைவனின் திருமுன் வந்து சேர உமக்குத் துணைபுரியும். ஆகவே தைரியத்துடனும் பொறுமையுடனும் உமது வேதனைகளை தாங்கிக்கொள்ளும்''.

இந்த வார்த்தைகள் இறந்த ஆன்மாக்கள் கைவிடப்பட்டவர்களல்ல, அவர்களது அவசர வேளையில் துணைபுரியும் மண்ணுலக வாசிகளும், வானுலக புனிதர்களும் அடங்கிய இறைவனது குடும்பத்தின் அங்கத்தவர்களே என்பதையும், அவர்கள் தமது பாவங்கள், குறைபாடுகளிலிருந்து விடுவிக்கப்படும்படியாக தமது செபங்களால் இறைவனுக்குப் பரிகாரம் செய்யும் கடமை மண்ணக விசுவாசிகளுக்கு உண்டு என்பதையும் எடுத்துக்காட்டுகின்றன.

உத்திப்புஸ்தலம் பரிசோதிக்கப்படும் இடம் அல்ல. சோதிக்கப்படும் காலமாகிய உலக வாழ்வு முடிந்து, இறைநீதிக்கமைய தண்டிக்கப்படும் இடமாகும். இது குறித்து திருச்சபை போதனை தெளிவாக உள்ளது. திருச்சபையின் ஓர் அங்கமான உத்தாிக்கும் ஆன்மாக்களுக்காக அது தினமும் மன்றாடி வருவதுடன், விசுவாசிகளையும் மன்றாடத் தூண்டும் வகையில் ஒரு மாதத்தையே அதற்கென ஒதுக்கியுள்ளது. அவர்களுக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கவும், செபிக்கவும் எமக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது எமது நற்பேறாகும்.

புனித அவிலா திரேசம்மாள் உத்தாிக்கும் ஆன்மாக்கள் மட்டில் அதிக பற்றுக்கொண்டிருந்தாள். அவர்களுடைய விடுதலைக்காக ஏராளமான செப, தபங்களைச் செய்துவந்தாள். அவளது மன்றாட்டினால் ஆன்மாக்கள் உத்தாிப்பு ஸ்தலத்திலிருந்து விடுதலையடைந்து மோட்சம் சேரும் காட்சியை இறைவன் பலமுறை அவளுக்குக் கண்கூடாகக் காட்டினார்.

இறந்தோர்மட்டில் நாம் செலுத்தவேண்டிய நன்றிக் கடன் ஒன்றுண்டு. அவர்களிடமிருந்து அநேக நன்மைகளைப் பெற்றிருக்கிறோம். அதற்காக பிரதிநன்றி செலுத்துவதற்கு எமக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பு இதுவே. இதைவிடுத்து இறந்தோருக்குப் பெரிய கல்லறைகளைக் கட்டுவதும், விளம்பரங்கள் செய்வதும் இறந்தோருக்கு எவ்வித நன்மையும் பயக்காதவை சுயபெருமைக்குரிய வெளி ஆடம்பரங்களேயாகும்.

இத்தகைய அனுபவங்கள் இன்னும் எத்தனையோ புனிதர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

இறந்தோருக்கு நாம் உதவி புரிய முடியும் என்பது ஆறுதல் தரும் ஒரு செய்தியாகும். இரக்கமுள்ள கடவுள் தமக்குத் தாமே ஒன்றும் செய்துகொள்ளாத நிலையிலிருக்கும் ஆன்மாக்களுக்கு உயிர்வாழ்வோர் செய்யும் பரிகாரங்களை ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறார்.

# ஆன்மாவின் பயணம்

**அருள்திரு A.M. ஸ்ரீபன்**
**செபமாலைத் தாசர் சபை,**

இறைவன் நம்மை இந்த உலகில் மானிடப் பிறவியாக படைத்துள்ளார் என்றால் அது நாம் பெற்ற பெரும் கொடை. மனிதப் பிறவியின் முதலும் முடிவுமான கடமை இறைவனை ஆராதிப்பது.

மனிதன் என்பவன் உடல் மட்டுமல்ல, அதிலும் மேலாக அழியாத ஓர் ஆன்மாவைக் கொண்டவன். எனவே மனித வாழ்வு ஓர் புரியாத புதிராகவே என்றும் இருந்துவந்துள்ளது. மேலைநாட்டு மெய்யில் அறிஞர்களும், கீழைநாட்டு கீர்த்தி பெற்ற இறையியல்வாதிகளும் மனித வாழ்வின் ஆரம்பம், முடிவு, நோக்கம் பற்றி சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே அறிவியல் சிந்தனைகளில் ஆழ்ந்தனர். ஆயினும் அவர்களின் மனித சிந்தனைகளுக்குள் சிக்காத சிறப்புமிகு அம்சமாகவே மனித வாழ்வின் முடிவு திகழ்ந்தது. ஆனால், இறைவெளிப்பாடுகள் தான் இதற்கு விடைகொடுத்தன.

ஆம், மனித வாழ்வின் ஆரம்பம் இறைவன் வாழ்வின் காலம். அந்த இறைவன் கொடுத்த அருட்பிச்சை, வாழ்வு ஓர் பயணம். திருவை நோக்கிச் செல்லும் ஓர் திருப்பயணம், ஆன்மீக யாத்திரை. உடல், உள, ஆன்மீக ஆறுதலை அனுபவிப்பதே ஓர் திருயாத்திரையின் நோக்கம். அதை இந்த உலகிலும் ஆன்மா அனுபவிக்க ஏங்கித் துடிக்கிறது. இந்த ஆன்மீகத் தாகம் தான் நம்மை கோவில்கள் தோறும் அழைத்துச் செல்கிறது.

மனித உடல் ஆன்மாவைத் தாங்கி நிற்கும் ஓர் கலம். இது வாழ்ந்து மடிந்துவிடும். ஆனால், ஆன்மா அழியாதது. இறைவனில், சங்கமமாக வேண்டியது. ஆன்மா என்றும் இறைவனைத் தாவிய வண்ணமாகவே இருக்கும். அவரை அடையும்வரை அவரை எண்ணி ஏங்கிக் கொண்டே இருக்கிறது. அவரின்றி, அவரது அருளின்றி வாழ முடியாநிலையில் கலங்கித் தவித்து நிற்கும். அந்த இறைவனை இந்த உலகிலே நினைக்கும்போதுதான் கஷ்டங்கள் கலைகின்றன, துன்பங்கள் துடைக்கப்படுகின்றன. கண்ணீர்கள் காய்ந்துபோகின்றன. அமைதி, மகிழ்ச்சி, நிறைவு தோன்றுகிறது.

மனித வாழ்விலே உடலின் தன்மை பெரும் பங்காற்றுகின்றது. மனிதன் அழியாத ஆன்மாவைக் கொண்டிருந்தாலும் இந்த உலகின் கவர்ச்சிகள், மாயைகள், பட்டம், பதவி, புகழ், செல்வம், உடல் இச்சைகள் இவைகளால் கவரப்பட்டு அவைகளுக்கு அடிமையாகி படைத்துப் பாதுகாக்கும் இறைவனின் படிப்பினைகளை, கட்டளைகளை மறந்து உலகப்போக்கில் அன்பை, நீதியைத் துறந்து சமத்துவத்திற்கு சமாதி கட்டி அகந்தையில் ஆழ்ந்து, பாவத்தில் வீழ்ந்து விடுகிறான்.

இதனால் தனி மனித வாழ்விலே, குடும்ப வாழ்விலே, சமூக வாழ்விலே, நாட்டு, உலக வாழ்விலே சீர்கேடுகள், அமைதியின்மைகள் உருவாகின்றன. இத்தகைய வாழ்வின் சில கட்டங்களில் உண்மைத் தன்மையை உணர்கின்ற ஆன்மா வாழ்க்கையின் சுமைகளையும் உடலின் இயலாத் தன்மையையும் அறிந்து மீண்டும் இறைவனை நோக்கி எழுகின்றது. பாவத்தை நினைத்து மனம் வருந்துகிறது. மன்னிப்பு வேண்டுகிறது. புதுவாழ்வு பெறுகிறது.

இந்த உலக வாழ்வின் முடிவில் ஆன்மா உடலைவிட்டுப் பிரிகிறது. உடல் தான் தோன்றிய மண்ணுக்கே திரும்புகிறது. அழியாத ஆன்மா, இறைவனோடு சங்கமமாக ஆவலோடு ஏங்கிச் செல்கிறது.

ஆனால், பாவநிலையில் மனிதன் இறக்கும்போது அந்த முற்றும் முழுதும் பாிசுத்தமான, பாவ அணு அணுகமுடியாத இறைவனை அடையமுடியா நிலையில் அந்தரித்து நிற்கின்றது. ஆன்மா இறைவனை அடையும்வரை அமைதியிழந்து ஏங்கி நிற்கிறது. இந்த நிலையில் ஆன்மா இறைவனை நோக்கி தனது பாவ மன்னிப்புக்காக இறைஞ்சி நிற்கிறது.

தங்கள் பாவங்களால் இறைவனை அடையமுடியாமல் தவிக்கின்ற இந்த ஆன்மாக்களுக்காக செபிக்கின்ற பெரும் பாக்கியத்தைப் பெற்றவர்கள் இந்த உலகத்தில் வாழ்கின்ற நாம்தான். நாம் இறந்தவர்களடைய ஆன்மாக்களின் பாவங்களுக்காக திருப்பலிப் பூசைகள் ஒப்புக்கொடுத்தல், செபம், ஒறுத்தல், உபவாசம், விரதம், ஏழைகளுக்கு உணவு அளித்தல், தேவையில் இருப்போருக்கு உதவி செய்தல், நம்மிடம் உள்ள பணம், பொருள், நேரத்தை மற்றவர்களுடன் அன்போடு பகிர்ந்துகொள்ளுதல் போன்ற பாவப்பாிகார நற்செயல்கள் வழியாக இறை மன்னிப்பைப் பெற்றுக்கொடுக்கிறோம்.

நாம் மாித்த அனைவருக்காகவும் இப்போதே இறைவனை இறைஞ்சுவோமா? நாம் ஆன்மாக்களுக்காக இறைஇரக்கத்தை வேண்டும்போது அந்த ஆன்மாக்கள் பாவத்திலிருந்து விடுதலை பெற்று இறைவனை அடைந்ததும் நமக்காக எனறும் இறை அருட்கொடைகளை, இறைவனின் இரக்கத்தை, சாந்தியை, சமாதானத்தை பெற்றுத்தந்தருளும்.

''மாித்த அனைவாின் ஆன்மாக்கள் மீது மனமிரங்கி இறைவா இன்ப சாந்தி தாரும்''

# நீத்தார்க்குத் திருப்பலி தேவை

உறவு வாழ்வின் ஆணி வேர். பச்சிளம்கொடி கொம்பைச் சுற்றிப் படர்வதுபோல் மனிதர் அனைவரும் ஒருவர் ஒருவரோடு அன்புறவில் வாழவிழைகின்றனர். உறவின் ஒன்றிப்பில்தான் மானிடவாழ்வு புதுப்பொருளும், பொழிவும் பெறுகின்றது. உறவு வாழ்வு இவ்வுலகப் பயணத்தோடு முடிவதில்லை. இறப்பையும் கடந்து அந்நாளும் தொடர்கிறது. எனவே வாழ்வோரோடு உறவுகொள்ளத் துடிக்கும் மானிடம் இறந்தோரை மறப்பதில்லை. தங்களோடு நெருக்கமான உறவில் வாழ்ந்து இறைபதம் அடைந்த பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் நினைவுகூர்ந்து அவர்களோடு என்றும் உறவில் நிலைத்திருக்க விரும்புகின்றனர்.

நீத்தார் நினைவு இன்று நேற்று தோன்றியதல்ல. அது பன்னெடுங்காலமாக வாழையடி வாழையாக எல்லா மனித சமூகங்களிலும் போற்றப்படும் மரபு. நீத்தாரை நினைவுகூர்ந்து அவர்களுக்காக மன்றாடுவது கிறிஸ்தவ மறையில் தொடக்க காலத்திலிருந்தே வழக்கிலிருந்து வந்துள்ளது. இறந்தவர் அடக்கம் செய்யப்பட்டு 3ஆம் நாள் அவருக்காக திருப்பலி ஒப்புக்கொடுப்பது சுமார் கி.பி. 170ம் ஆண்டில் சின்ன ஆசியாவில் இருந்ததாக வரலாறு உரைக்கின்றது. 4ஆம் நூற்றாண்டில் இறந்தவர்களுக்காக 7ஆம் நாள், முப்பதாம் நாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. உத்தாிப்பு நிலையில் உற்றவர்கள் தூய ஆவியின் வல்லமையால் தூய்மை அடைந்து இறைவனின் நிறைவான உறவில் நுழைவதற்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கும் வழக்கம் 10ஆம் நூற்றாண்டில் குளுனி என்னும் நகரில் வாழ்ந்த ஒடிலோ என்ற மடாதிபதி தனது துறவற இல்லத்தில் இறந்த துறவியருக்காக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 2ஆம் நாள் திருப்பலி நிறைவேற்றினார். அந்த மரபுதான் காலப்போக்கில் இறந்த விதவைகளின் நினைவுநாள் விழாவாக உருவெடுத்தது.

திருச்சபை ஓர் உறவுச் சமூகம். கிறிஸ்துவில் விசுவாசம். கொள்ளும் அனைவரும் உடன்படிக்கை ஒன்றிணைந்து வாழும் உயிருள்ள சமூகம். திருச்சபை கொள்ளும் உறவின் ஒன்றிப்பில் மூன்று நிலைகள் உள்ளன.

– இவ்வுலகில் திருச்சபையில் வாழும் அனைவரும் ஒருவரோடு ஒருவர் நெருக்கமான முறையில் இணைக்கப்பட்டுள்ளனர். *இவர்களைப் பயணம் செய்யும் திருச்சபை என்கிறோம்.*

– இவ்வுலக பயணத்தை முடித்துவிட்டு இறைவனோடு ஐக்கியமாகி முடிவில்லாப் பேரின்பத்தை துய்க்கும் புனிதர்களும் உள்ளனர். இவர்களை *வெற்றிவாகை சூடிய* திருச்சபை என்கிறோம். இப்புனிதர்கள் பயணம் செய்யும் திருச்சபையின் வாழ்வில், நம்பிக்கையும், எதிர்காலத்தில் அடையவேண்டிய இலக்கு பற்றிய தெளிவையும் அளிக்கின்றனர்.

– இறந்த விசுவாசிகளில் பேரின்ப நிலையை அடைய ஏக்கத்தோடே காத்திருக்கிறவர்களும் உள்ளனர். அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்தபோது புரிந்த பாவங்களால் ஏற்பட்ட காயங்களிலிருந்து குணமாகி முழுமையான அளவில் தூய்மைபெற உத்தாிப்பு நிலையில் இருக்கின்றனர். இவர்களைத் தூய்மைப்படுத்தும் திருச்சபை என்கின்றோம்.

இந்த மூன்று நிலையில் உள்ளோர் ஒருவரோடு ஒருவர் தோழமையும் அன்புறவும் கொண்டுள்ளனர். பயணம் செய்யும் திருச்சபையினர் வெற்றிவாகை சூடிய புனிதர்களிடம் செபிக்கின்றனர். அவர்களது பாிந்துரையை வேண்டுகின்றனர். அதேவேளையில் உத்தாிப்பு நிலையில் உள்ளவர்களுக்காகவும் இறைவனின் இரக்கத்தை மன்றாடுகின்றனர். பயணம் செய்யும் திருச்சபை கிறிஸ்துவோடு இணைந்து ஒப்புக்கொடுக்கும் திருப்பலியில் வாழ்வுப் பயணத்தை முடித்து அமைதியில் இளைப்பாறும் அனைத்து விசுவாசிகளையும் நினைவுகூர்கின்றது. அவர்கள் மேல், இறைவனின் இரக்கம் பொழியப்பட வேண்டுமென மன்றாடுகிறது. பாவம் நீக்கி தூய்மையடைந்து முடிவில்லா வாழ்வில் அவர்கள் நுழைய வேண்டுமென வேண்டுதல் எழுப்புகிறது.

கிறிஸ்துவின் கல்வாாிப் பலியினால் விளையும் மீட்பின் பலன்கள் எண்ணற்றவை அதில் பொதிந்துள்ள ஆற்றலும், சக்தியும் அளவிட முடியாதவை. அவ்வாறே கல்வாாிப் பலியின் நினைவாக்கமாகிய நற்கருணைப் பலி வழங்கும் அருளும் ஞானப் பலன்களும் எண்ணற்றவை. இறைவனின் அருள் வரலாற்றில் வாழ்பவர்களை மட்டுமல்லாது வரலாற்றைக் கடந்தவர்களையும் ஊடுருவி அனைத்து நிலையினரையும் புதுப்பிக்கும் ஆற்றல் வாய்ந்தது. எனவேதான் திருச்சபை ''உயிர்த்தெழும் நம்பிக்கையுடன் இறந்துபோன எங்கள் சகோதர, சகோதாிகளையும் அனைவரையும் நினைவு கூர்ந்து ஒளிர்மிக்க உம் திருமுன் ஏற்றுக்கொள்ளும்'' என்று திருப்பலி கொண்டாட்டத்தில் மன்றாடுகின்றது.

இறந்தவர்கள் பேரின்ப நிலையை அடைவது இறைவன் அவர்களுக்கு அருளும் தனிப்பட்டகொடை. அதேவேளையில் நாம் அவர்களுக்காக செபிப்பது திருப்பலி ஒப்புக்கொடுப்பது நாம் அவர்களோடு கொள்ளும் உறவின் வெளிப்பாடு.

**எஸ். ஜெயா**

# இளைஞனே இதோ உனக்கோர் பாதை...!

வற்றாத கடல் ஒரு புறம்,
பரந்த நிலம் ஒரு புறம்!
பல இன மொழி மக்களும்
நிறைந்த மறைமாநிலம்!
ஆம். உண்மைதான் – ஆனால்,
வழிகாட்டும் ஓர் வல்லவனின்றி
வாழ்க்கையில் அமைதியின்றி
இறைமகன் யேசுவின்
அன்பு வழி அறியாமல்,
உவந்த தங்கள் உள்ளத்தின்
அன்பின் தாகம் தீர்க்க
ஆயனில்லா மந்தைகளாய்
ஆயிரம் ஆயிரம் மறைமாவட்ட
குடிமக்கள் உன்போன்ற
தியாகத்தின் வல்லவனை
எதிர்நோக்கியிருக்கின்றனர்
இம் மக்களை உயர்த்திட
அன்பின் தாகத்தை
நம் அண்ணலின் அன்பால்
தீர்த்திட நம் தலைவன் இயேசு
உன்னை யாழ். மறைமாநிலத்தில்
குருவாக தொண்டு புரிய
அழைக்கின்றார் எழுந்திடு!
தாளாது நடந்திடு!
அன்புக் காவியம் படைத்திடு!

– கலைப்பிரியன் –
பெரியவிளான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மறைமாவட்டத்தில் நடைபெற்ற இறைதியான வழிபாடுகளின் தொகுப்பு

## சென்ற இதழ் தொடர்ச்சி...

### இளையோருக்கான வழிபாடு புனித பத்திரிசியார் கல்லூரியில்...

யாழ். மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலும் உள்ள இளைஞர்கள், யுவதிகளை ஒன்றிணைத்து புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் 2.10.2001 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் யாழ். இளையோர் ஒன்றியத் தலைவர் அருள்திரு சாள்ஸ் தலைமையில் நற்செய்திப் பெருவிழாவும் இறைதியான நிகழ்வுகளும் ஆரம்பமாகின.

இந்தியாவில் இருந்து வருகை தந்த டிவைன் சென்ரர் இறைதியான இல்லச் சகோதரன் ஜோர்ஜ் தரகன் போதனையினை மேற்கொண்டார். அவர் தனது போதனையில் இறைவார்த்தை பற்றியும் அவ்வார்த்தை அடங்கியுள்ள வேதாகமத்தின் சிறப்பு பற்றியும் சுருக்கமானதும் தெளிவான விளக்கத்தினை அளித்தார். அத்தோடு கடவுளை உரத்த குரலில் சத்தமிட்டு துதிக்கவேண்டும். ஏனெனில், அத்தகைய செயலே ஆதித்திருச்சபையிலும் காணப்பட்டுள்ளது. இதற்கு திருவிவிலியம் சாட்சியாக உள்ளது. ஆகவே இறை ஆராதனை சத்தமிட்டு செய்வது பிரிவினை சகோதரர்களுக்கு உரியதன்றோ அல்லது வெட்கப்படுவதற்கு உரியசெயலுமல்ல, அது ஓர் மகத்துவமான செயல் எனக் கூறினார். இளைஞர்கள் நாட்டின் தலைவர்கள், சமுதாயத்தின் தலைவர்கள். அத்தோடு இறைவன் விரும்புகின்ற பிள்ளைகள். ஆகவே அவர்களிடம் பாவம் இருக்காது. ஏனெனில் இயேசுவும் அவ்வாறே வாழ்ந்தார். ''இயேசு வளர வளர ஞானத்திலும் அறிவிலும் மென்மேலும் உகந்தவரானார்'' ''அவ்வாறே இளையோராகிய நீங்கள் பாவத்தினை வெறுத்து ஒதுக்கும்போது இயேசுவைப் போல வருவீர்கள் அத்தகைய நிலையினைப் பெற்றுக்கொள்ள நாம் இவ்வளவு காலமும் செய்த பாவங்களுக்கு உண்மையில் மனம் வருந்தி நல்ல பாவங்கீர்த்தனம் செய்தால் பாவியான சக்கேயுவை இயேசு மன்னித்தது போல எம் பாவங்களையும் நிச்சயம் மன்னிப்பார். எத் துன்பத்தினையும் எதிர்கொள்ள ஆவியானவர் என்றும் துணை நிற்பார்'' எனத் தனது போதனையில் கூறினார்.

இவரது போதனையினைத் தொடர்ந்து அருட்தந்தை அகஸ்ரின் அடிகளாரது போதனை இடம்பெற்றது. இளைஞர்கள் ஒழுக்கமுடையவர்களாகவும் தூய்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். ஏனெனில், ஒவ்வொருவரும் கடவுளின் ஆலயம் இருப்பதினால் இவற்றிற்கு மாறுபட்டவர்களாக இருப்பவர்களாயின் அவர்கள் சாத்தானின் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டவர்கள். இதனால் உலக ஆசைகளான, பொன் ஆசைகள், பாலியல்பு பகிடிகள், குடி மதுபோதைப் பழக்கவழக்கங்கள், கலாச்சார சீரழிவுகள் என்பவற்றுக்கு உட்பட்டவர்களாகவே இருப்பார்கள். இவற்றில் இருந்து ஓர் இளைஞன் அல்லது யுவதி எழுந்துவிடுவானாயின் அவனைவிட்டு சாத்தான் சத்தத்துடன் ஓடி விடும்.

எனவே இளையோர்களாகிய உங்களை சாத்தான் இடைவிடாது சோதித்துக்கொண்டே வரும். அதில் இருந்து விடுதலை பெற இறைவனில் முழுமையான நம்பிக்கைகொண்டு வாழவேண்டும். இவ்வாறு நம்பிக்கைகொண்டு வாழ்ந்திடினும் பெற்றோரை மதியாதவர்கள், துன்புறுத்துபவர்கள், முதியோர் இல்லங்களில் கொண்டுபோய் சேர்ப்பவர்களும் இருக்கின்றனர். அவர்களது நம்பிக்கை வீணானது. பயனற்றது. அத்தகைய செயலில் ஈடுபடுபவர்கள் கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி கடலில் தள்ளி விடவேண்டும். ஏனெனில், தன்னை பெற்று வளர்த்து இவ்வுலகில் ஓர் சிறப்புற்ற மனிதனாக மாற்றிய பெற்றோரை மதியாதவன் கடவுளின் கொடிய தண்டனைக்கு உள்ளாகின்றான். பெற்றோரை மகிழ்வோடும், துன்பங்களை கொடுக்காது பராமரிக்கும்வேளை இறைதந்தையும் உம்மைக் காத்துக்கொள்வார் என தனது போதனையில் கருத்துக்களை முன்வைத்தார்.

செல்வன் யே. அனுஸ்டதாஸ்
செல்வி லூ. மேர்சி சுஜந்தினி
திருமதி கொறற்றி அருளானந்தம்
திருமதி இம்மாகுளேற் ராஜ்குமார்
செல்வன் கி. செல்மர் எமில்
திரு எஸ். மரியநாயகம்

தொடர்ந்து ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலி நடைபெற்றது. பின்னர் நற்கருணை ஆண்டவர் எழுந்தேற்றம் செய்யப்பட்டு அருட்தந்தை அகஸ்ரீன் அவர்கள் அனைவருக்காகவும் விசேடமாக மன்றாடினார். மிகவும் பக்தி பற்றுதலோடு இவ் வழிபாடு அரைமணி நேரத்திற்கு மேலாக நடைபெற்றது. இவ் மன்றாட்டின் நிமித்தம் 100ற்கு மேற்பட்டோர் குணமடைந்தனர். இறைவனுக்கு சாட்சியமும் பகர்ந்தனர். இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு நிலையிலும் உள்ளவர்களுக்காக விசேடமாக செபம் செய்யப்பட்டது.

இவ் அருள்மழை பொழியும் இறைவழிபாட்டில் 5000ற்கு மேற்பட்ட இளைஞர்களும் பெரியோரும் பங்குபற்றினர். இதனைவிட அருள்தந்தையர்களும், அருட்சகோதரர்களும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். குறிப்பாக அருள்திரு மைக்கல் சவுந்தரநாயகம் அவர்கள் டிவைன் சென்ரர் இறைதியான சகோதரர் மற்றும் அருள்தந்தையோடு சேர்ந்து வழிபாட்டுப் பாடல்களிலும் மொழிபெயர்ப்பிலும் பெரும் பங்கு ஆற்றினார். இந்நிகழ்விற்கு வந்த அனைத்து இளம் சமூகத்தினரும் ஓர் புது ஒளிபெற்றவர்களாகவே காணப்பட்டனர். காலை 10மணி தொடக்கம் மாலை 5மணி வரை எவ்வித குழப்பமும் இன்றி இறை அருளினால் வழிபாடு உள்ளத்தைத் தொடக்கூடிய நிலையில் இடம்பெற்றது. இறைவனுக்கு நன்றி.

### நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில்...

ஒக்டோபர் 3ஆம் நாள் புதன்கிழமை இறைதியானங்கள், நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலய முன்றலில் மாலை 4.30மணிக்கு ஆரம்பமாகி இரவு 8.30மணியளவில் இறைஆசீருடன் நிறைவுபெற்றது.

இவ் வழிபாட்டிற்கு பல இடங்களிலிருந்தும் ஏராளமான பக்தர்களும் அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் இறைஆசீர் பெற வருகை தந்து நிறை ஆசீருடன் சென்றனர். வழிபாட்டின் ஆரம்பத்தில் திருஇசைக் கீதங்கள் பாடப்பட்டன. தொடர்ந்து சகோதரர் ஜோர்ஜ் தமது மறைபோதனையில் உண்மையான விசுவாசத்துடன் இறைவனிடம் இரந்து கேளுங்கள் நிச்சயம் அவர் உங்களுக்குக் கொடுப்பார். கைகளை உயர்த்தி உருக்கத்தோடு மன்றாடுங்கள் என வேண்டினார். தொடர்ந்து அருட்தந்தை அகஸ்ரீன் அவர்கள் தமது தனிப்பட்ட செபத்தின் பின் மறைப்போதகத்தில் மக்களின் மனமாற்றத்தின் அவசியம் பற்றி இடித்துரைத்தார். ஒற்றுமையின் தேவையை உணர்த்தினார். சாத்தானின் செயல்களுக்கு இடம்கொடுக்கக் கூடாது என விளக்கம் கூறினார்.

இயேசுக் கிறிஸ்துவின் பெயரால் உங்களை நான் வேண்டுவது நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டு மன்றாடுங்கள். உங்களிடையே பிளவுகள் வேண்டாம். மாறாக ஒரே மனமும் ஒரே கருத்தும் கொண்டு மீண்டும் முற்றிலும் ஒன்றித்து வாழுங்கள் என ஒற்றுமையின் அவசியத்தை எடுத்துக்கூறினார். மனம் மாற இறைவன் உங்களுக்கு இறுதி அழைப்பு விடுத்திருக்கின்றார். எனவே பகைமை, சச்சரவுகளை மறந்து கிறிஸ்து யேசுவில் ஒன்றித்து யேசுவின் உடலும் இரத்தமுமாக [illegible] தியுள்ளவர்களாகவும் நற்கருணையை பெற தகுதியுடன் [illegible] ஒப்புரவு அருட்சாதனம் பெறுவோம் எனக் கூறினார்.

எமது விருப்பத்தின் படியன்று யேசுக் கிறிஸ்துவின் விருப்பத்தினதும் கட்டளையினதும் பெயராலேயே இன்று இங்கு வந்திருக்கின்றோம். எனவே தொடர்ந்து குணமாக்கலில் அற்புதங்கள், அருங்குறிகள் நிகழ குணமடைய உரத்த குரலில் விசுவாசத்துடன் செபிக்கும்படி தூண்டி அனைவரையும் செபத்தில் ஆழமாக வேரூன்ற வைத்தா. அருட்தந்தை அவர்களின் செபத்தின் வல்லமையாலும் பக்தர்களின் விசுவாசத்தினாலும் ஏராளம் அற்புதங்கள், அருங்குறிகள் நிகழ்ந்து பலர் தம் நோய்களிலிருந்தும் கட்டுக்களிலிருந்தும் விடுபட்டதை உணர்ந்து சாட்சியம் கூறி இறைவனுக்கு நன்றி செலுத்தினர்.

### யாத்திரைத்தலமான புனித சின்னமடுமாதா ஆலயத்தில்...

யாழ். மண்ணின் புனித ஸ்தலங்களில் ஒன்றாக விளங்கும் சின்னமடு மாதா ஆலயத்தில் ஐப்பசி 4ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00மணியளவில் அருள் ஒளியேற்றும் குணமாக்கல் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் இதயத்தையே ஊடுருவி இறைவனின் பிரசன்னத்தைக் காணும் இனிய கானங்கள் இதயம் திறந்த பகிர்வுகள் இடம்பெற்றன.

இங்கு குறிப்பிடக்கூடிய நிகழ்வாக பிள்ளைகள் பெற்றோரிடம் இதுவரை செய்த குற்றங்களுக்காக பெற்றோரைத் தேடிச் சென்று மன்னிப்புக் கேட்டனர். அதேபோல் அருட்தந்தையர்களுக்கெதிராக சொல், செயல்களால் குற்றம் புரிந்தோரும் அங்குள்ள அருட்தந்தையர்களிடம் மன்னிப்புக் கேட்டனர். இந் நிகழ்வானது ஒவ்வொருவரும் தம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி இறையருளைப் பெற ஆயத்தமானதைக் காட்டியது. இதைத் தொடர்ந்து இறைவழிபாட்டின் உயர்ந்த வழிபாடாகிய திருப்பலி, நற்கருணை எழுந்தேற்றம், ஆசீர்வாதம் என்பன இடம்பெற்றன. மழையின் மத்தியிலும் இந்தப் புனிதமான நிகழ்வில் ஏராளமான உடல், உள நோயாளர்கள் நலம்பெற்று இறைவனுக்கு நன்றியாகச் சாட்சியம் பகர்ந்தனர்.

அருள்தந்தை அகஸ்ரீன் அடிகளாரின் உருக்கமான வேண்டுதல்களும் ஜோர்ஜின் இதயம் திறந்த வாழ்வுப் பகிர்வும் எம்மிடையே உள்ள பவிதமான உடல், உள்ள நோய்களுக்கு நலமளித்தது.

### யாத்திரைத்தலமான மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில்...

இறைதியான வழிபாட்டின் தொடர்ச்சியாக யாத்திரைத்தலமான மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் மழை காரணமாக ஏற்கனவே ஒழுங்குசெய்யப்பட்ட மைதானம் கைவிடப்பட்டு ஆலயத்தின் உள்ளே தியான வழிபாடுகள் காலை 10.00 மணிக்கு ஆரம்பமானது. தியான வழிபாடு ஆரம்பமான நேரம் தொடக்கம் மழை தொடர்ந்து பெய்துகொண்டே இருந்தது. இருப்பினும் மக்கள் குடைகளைப் பிடித்துக்கொண்டு ஆலயத்தின் இருமருங்கும் பெருவெள்ளமாக திரண்டு நின்றனர்.

மழைபெய்துகொண்டிருந்த வேளையின் இறைவனின் அருள் மழையும் மக்கள் மேல் நிறைவாகப் பொழியப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. உடல்,உள நோய்களிலிருந்து குணமடைந்த மக்கள் பலர் சாட்சியம் பகர்ந்தனர். மாலை 5.00 மணிக்கு வழிபாடுகள் நிறைவுபெற்றதும் மக்கள் அனைவரும் மனமகிழ்ச்சியுடன் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

### யாத்திரைத்தலமான பண்டத்தரிப்பு பத்திமா மாதா ஆலயத்தில்...

இந்தியாவிலிருந்து வருகை தந்த அருள்தந்தை, சகோதரர் ஆகியோர் யாழ். மறைமாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் குணமாக்கல் வழிபாடுடன் கூடிய இறைதியானங்களை மிகவும் பக்திபூர்வமாக வழங்கினார்கள். இந்தவகையில் 6ஆம் திகதி சனிக்கிழமை இறைவனைப் பற்றி சிந்திக்க, தியானிக்க காலை முதல் மாலை வரை ஆலய முன்றலில் மக்கள் குழுமியிருந்த காட்சி மெய்சிலிர்க்க வைத்த ஒரு நிகழ்வாக அமைந்தது.

தியானம், இறைவனுக்குப் புகழ்ச்சிப் பாடல்கள், திருப்பலி, குணமாக்கல் வழிபாடு எனத் தொடர்ந்து பல வேண்டுதல்களையும் கொண்ட செபங்களுடன் மாலை 5 மணியளவில் நிறைவுபெற்றது.

அனைத்து மக்களுக்குமே இது ஒரு புதுமையான அனுபவத்தை பெற்றுக்கொடுத்த விசுவாச வாழ்வில் அவர்கள் தளர்வுறாமல் இருப்பதற்கு வழிசமைத்த உன்னதமான காலம் என்றால் அது பொய்யாகாது. இவற்றை அவர்களின் நாவுகள் இன்றுவரை உதிர்த்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு வார்த்தைகளுமே வெளிப்படுத்தி நிற்கின்றன.

### யாத்திரைத்தலமான பருத்தித்துறை புனித லூர்து அன்னை ஆலயத்தில்...

7.10.2001 அன்று வழிபாடு காலை 9மணிக்கு ஆரம்பமாகியது. பரிசுத்த ஆவியின் பாடலுடன் ஆரம்பமாகிய இவ் வழிபாட்டில் இறை இயேசுவின் பிரசன்னம் வேண்டி மக்கள் அனைவரும் கூவி அழைத்தனர். சகோ. ஜோர்ஜ் தன்னை அறிமுகப்படுத்திய பின் அல்லேலுாயா கோஷங்களால் இறைபுகழ் எழுப்பி இறைவார்த்தையை உதாரணம் காட்டி அருளுரை வழங்கினார். அடுத்து அகஸ்ரின் அருட்தந்தையின் ஆங்கில மறையுரையை அருள்திரு மைக்கல் சவுந்தரநாயகம் மொழிபெயர்த்தார். எல்லாக் குருக்களும் சேர்ந்து நண்பகல் 12மணிக்கு திருப்பலி நிறைவேற்றினார்.

திருப்பலியின் போதும், நற்கருணை எழுந்தேற்றத்தின் போதும் குணமாக்கல் நடைபெற்றது. மக்கள் அனைவரும் ஒரே மனதாக எழுப்பிய வேண்டுதல்களுக்கு இறைவன் அருள்மழை பொழிந்தார். 2000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த, நிகழ்வு இன்றைய நிகழ்விலும் நடைபெற்றதுபோல் மக்கள் உணர்ந்தனர். அநேகம் பேர் சகல நோய்களிலிருந்தும் குணமடைந்தனர். நடக்க முடியாதவர்கள் நடந்தனர். காது கேட்காதவர்கள் குணம் பெற்றனர். கழுத்துப் பிடிப்பு, கை கால் பிடிப்பு நோயிலிருந்து விடுபட்டனர். கான்சர் நோயிலிருந்து ஒருவர் விடுபட்டார். பரிசுத்த ஆவியை நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பெற்றனர். இறைவார்த்தையை வாசிக்க பலபேர் ஆவல் கொண்டனர்.

கால் நடக்க முடியாமல் இந்தியா சென்று வைத்தியம் செய்து குணம் பெறாமல் இருந்த ஒரு பெண் ஊன்றுகோல் இல்லாமல் அன்று நடந்தாள். சிறுவயது முதல் நடக்க முடியாமல் இருந்த இளைஞன் ஊன்றுகோல் இல்லாமல் நடந்தார். பிறந்தது முதல் நடக்க முடியாமல் இருந்த இந்து மதத்தைச் சேர்ந்த சிறுமி நடந்தாள். இவர்களுடன் சேர்ந்து குணமடைந்த பலபேர் தாம் நோய்களிலிருந்து விடுபட்டோம் என்று சாட்சியம் கூறி இறைவனுக்கு நன்றியும் புகழும் கூறினர். இறைவனின் அற்புதங்களை நேரில் கண்டு அனுபவித்த ஆயிரக்கணக்கான மக்கள் அல்லேலூயா என்று கூறி கைதட்டி ஆர்ப்பரித்து இறைவனுக்கு நன்றி செலுத்தினர். மக்கள் அனைவரும் இறை பிரசன்னத்தை அன்று அனுபவித்தனர். மாலை 5மணிக்கு வழிபாடு நிறைவுற்றது. அன்றைய வழிபாடு மக்களின் விசு வாசத்தை ஆழப்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப, தப, தியான வாழ்வே எம்மை காக்கவல்லது

## செபமாலைத் தாசர் சபை இலங்கை மாகாண முதல்வர் அ.ம.ஸ்ரீபன் அடிகளாருடன் நேர்காணல்

– நேர்காணல் –
எஸ். யேசுதாஸ்

பரிசுத்ததந்தை பதினோராம் பத்திநாதர் 1926ஆம் ஆண்டு வெளியிட்ட 'ரேரும் எக்ளேசியே' (Rerum Ecclesiae) என்ற புகழ்மிகு சுற்றுமடலில் மறைபரப்புப் பணிக்கு இறையருளைப் பெற்றுத்தரும் மின்சக்தி நிலையங்களாக காட்சித் தியான சபைகள் தோற்றம் பெறவேண்டும்.

சுதேசிகளைக் கொண்டே இப் பணியைத் தொடங்கி வளர்த்தெடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

திருத்தந்தையின் விருப்பை செயலாக்க சிந்தித்தார் அப்போதைய யாழ். ஆயர் மேதகு கியோமார் O.M.I. ஆண்டகை அவர்கள். காட்சித் தியான வாழ்வில் நாட்டம் கொண்டே பக்தியிலும், அறிவிலும், புனிதத்திலும் சிறந்து விளங்கிய தவத்திரு B.A. தோமஸ் O.M.I. அடிகளாரை செப, தப தியான சபை ஒன்றை நிறுவப் பணித்தார்.

ஆயரின் ஆணைக்கிணங்க 1928ஆம் ஆண்டு மாசி 2ஆம் நாள் தோலகட்டி என்னும் சிற்றூரில் ஆறு இளைஞர்களுடன் செபமாலைத் தாசர் சபையைத் தோற்றுவித்தார். 'கடவுளுக்கு நிகர் யார்?' என்னும் விருதுவாக்குடன் முளைகொண்ட இச் சிறிய சபை காலப்போக்கில் கடல் கடந்தும் பல கிளைகளைப் பரப்பி பெருவிருட்சமாகத் திகழ்கிறது.

இச் சபையின் இலங்கை மாகாண முதல்வராக அருள்திரு அ.ம. ஸ்ரீபன் CR அவர்கள் செயலாற்றி வருகிறார். அவருடனான சந்திப்பின் செய்திகள்.

**✝ செபமாலைத் தாசர் சபை இயங்கிவரும் நாடுகள், சர்வதேச, உள்நாட்டு இயக்குனர்களை கூற முடியுமா?**

ஆசிய நாடுகளின் மனந்திரும்புதலை மையமாகக்கொண்டு நிறுவப்பட்ட எமது சபை இன்று இலங்கையிலும், இந்தியாவிலும் இயங்கிவருகிறது. இச் சபையின் தலைவராக இந்திய நாட்டின் கேரளா மாநிலத்தைச் சேர்ந்த அருள்தந்தை K.P. சேவியர் அடிகளாரும் இலங்கை மாகாண முதல்வராக அருள்திரு அ.ம. ஸ்ரீபன் CR அடிகளாரும் பணியாற்றுகின்றனர்.

**✝ பணித்தளங்கள் எங்கே? எத்தனை?**

19 பணித்தளங்கள், 15 மறைமாவட்டங்களில் உண்டு.

1) செபமாலை ஆசிரமம் – தோலகட்டி, இலங்கை 2) அருள் ஆசிரமம் – யாழ்.நகர், இலங்கை 3) ஜபமாலை ரஜனி செவன – கொச்சிக்கடை, இலங்கை 4) செபமாலை ஆசிரமம் – வவுனியா, இலங்கை 5) செபமாலை ஆசிரமம் – கண்டி (குருமாணவர் விடுதி), இலங்கை 6) பாத்திமாகிரி ஆசிரமம் – வடக்கன்குளம், தமிழ்நாடு 7) புஷ்பவனம் ஆசிரமம் – மணப்பாறை, திருச்சி 8) சிறுமலர் ஆசிரமம் – திருச்சி, தமிழ்நாடு 9) சாந்தோம் ஆசிரமம் – திருச்சி, தமிழ்நாடு 10) அன்னை ஆசிரமம் – சென்னை, தமிழ்நாடு 11) றோசறிகில் ஆசிரமம் – இறிஞாலங்குடா, கேரளா 12) தேவமாதா ஆசிரமம் – கன்னூர், கேரளா 13) அமலாம்பிகா ஆசிரமம் – ஏலூர் ஆந்திரா, இந்தியா 14) நிஷ்களங்கா ஆசிரமம் – அம்பிகபூர், மத்தியபிரதேசம் 15) மாலாமரியா ஆசிரமம் – சசாராம், பாற்னா வடஇந்தியா 16) றொசேறியன் ஆசிரமம் – ஜல்பைகுறி, வடஇந்தியா 17) சான்ஜோ ஆசிரமம் – ஜபல்பூர், வடஇந்தியா 18) றொசேரியன் தலைமையகம் – பெங்களூர், இந்தியா 19) றொசேறியன் பயிற்சி இல்லம் – பெங்களூர், இந்தியா.

இவற்றில் தமிழ், மலையாளம், இந்தி, கன்னடா போன்ற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட துறவிகள் உள்ளனர்.

**✝ குருக்கள், அருட்சகோதரர் மொத்தம் எத்தனை?**

| | |
|---|---|
| குருக்கள் | – 30 |
| அருட்சகோதரர் | – 175 |
| தவத்துறவிகள் | – 15 |
| ஆரம்ப விண்ணப்ப நிலையினர் | – 84 |

**✝ தங்கள் சபையின் பணிகள் எவ்வகையானது?**

கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தை திவ்விய நற்கருணை ஊடாக எமது ஆச்சிரமங்கள் தோறும் எழுந்தேற்றம் செய்து அதன் மூலமாக செபமாலை செபித்து அனைத்துலக மக்களின் பாவங்களுக்குப் பரிகாரம் தேடி இறைவனுடைய ஆசீர்வாதத்தையும், இரக்கத்தையும் அவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதே.

தூயஆவியின் செயலாற்றுக்கு எம்மை அர்ப்பணித்து அவருடைய வழிநடத்தலிலே எமது வாழ்வை வாழ்வது. கன்னிமரி எமது அற்புதத் தாயாகவும், அவளது மாசற்ற இருதயம் இவ்வுலக ஆசாபாசங்களில் இருந்து அடைக்கலம் தரும் கோட்டையாகவும் விளங்குவதால் மனுக்குலத்தை மரிஅன்னைக்கு ஒப்புக்கொடுத்தல். குருக்கள், துறவியர், பொதுநிலையினருக்கு தியானத்திற்கான வசதிகள் செய்து கொடுப்பது. எமது வேலைத் தளங்கள், தோட்டங்களில் ஏழைமக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தல்.

**✝ பாதுகாவலன் ஊடாக வாசகர்களுக்கு தாங்கள் கூறவிரும்புவது ?**

தூயஆவியின் செயலால் தோமஸ் அடிகளை ஒரு கருவியாக்கி இச் சபையின் தோற்றுவாயாக எமது நாடு இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டது. நமது விசுவாச வாழ்வுக்கு ஒரு எழுச்சியாகும். செப, தப, தியான வாழ்வே எம்மை துன்பங்கள், நோய்கள், பாவங்கள், போர்களில் நின்று காக்க வல்லது. நற்கருணைநாதரின் பிரசன்னத்தை விசுவசித்து அவரது இரக்கத்தால் புதுவாழ்வு காணவேண்டும்.

ஸ்தாபகர் தோமஸ் அடிகளுக்கு புனிதர் பட்டம் வழங்குவதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுவரும் இவ்வேளை அவருடைய நவநாள் மன்றாட்டை, தனியான, குடும்ப, பக்திச்சபை வழிபாடுகளிலும் செபித்து புனிதர்பட்ட மகிமைக்கு உதவிடுங்கள். நீங்கள் பெற்ற சலுகைகள், அற்புதங்களை அறிக்கையிடுங்கள். இறையரசிற்காக உழைக்க எம்மோடு இணையுங்கள்.

# பானையில் இருந்தால்தான்...

## (உள்ளத்தின் நிறைவில் நின்றே வாய் பேசும்)

அருள்திரு
அன்ரனிபாலா

சென்ற இதழ் தொடர்ச்சி...

அப்பாடல்கள் எல்லோராலும் பாடக்கூடிய பாடல்களா என்றும், அப்பாடல் பிரதிகள் இறைமக்கள் எல்லோருக்கும் வழங்கமுடியுமா எனவும் பார்ப்பது அவசியம். பாடல் பயிற்சியினை தாமாக திருஇசைக் குழுவினர் மேற்கொள்வதிலும் பார்க்க அப் பாடல்களை ஏற்கனவே அறிந்த தம்மைவிட கூடிய ஞானம் உடைய சிறந்த பயிற்சிகளை வழங்கக் கூடிய ஒருவரை, அக்குழுவில் இருந்தோ வெளியில் இருந்தோ வரவழைத்து அவரின் நெறிப்படுத்தலின் உதவியோடு பயிற்சி செய்வது மிகவும நல்லது. வயலின் ஆர்மோனியம் போன்ற சுரங்களை வெளிப்படுத்தக்கூடிய இசைக் கருவிகளினதும், மிருதங்கம் தாளம் போன்ற கால அளவைத் தரக்கூடிய கருவிகளினதும், உதவியுடனும் சுருதி தப்பாமல் இருப்பதற்காக சுருதிப் பெட்டியுடனும் பயிற்சி எடுப்பது மிகவும் தேவையானதாகும். பயிற்சி எடுக்கும்போது குரல் ஒத்திசைவும், இராக தாள ஒன்றிப்பும், இசைக் கருவிகளுடனான இணைவும் கவனிக்கப்பட வேண்டும். திருஇசைக் குழுவினர் அத்தனைபேரும் ஒழுங்காக வந்து வேறு பராக்குகள் இடையூறுகளுக்கு இடம்கொடாமலும், அவசரப்பட்டு பயிற்சியை முடிக்காமலும், நேரமெடுத்து ஆறுதலாக, ஒழுங்கான பயிற்சியை மேற்கொள்வது அவசியம். தமது சொந்த விருப்பு வெறுப்புகள், கோபதாபங்களுக்கு இடம்கொடாது அர்ப்பணம், தியாக மனம், தாழ்ச்சியுடன் பயிற்சியை குழு மனப்பான்மையுடன் மேற்கொண்டு திருஇசைக் குழுவினர் தம்மை ஒழுங்கான கட்டுப்பாட்டுடனான குழுவாக மாற்ற வேண்டும்.

### 3.1 திருஇசைப் பயிற்சி வழங்குபவர்கள்

பாடல் பயிற்சி கொடுப்பவர்கள் யாராக இருந்தாலும், பங்குகளுக்கும் ஆலயங்களுக்கும் வருகை தந்து திருவிழாக் காலங்களிலோ, விசேட திருநாட்களிலோ பாடல் பயிற்சி வழங்கும் இவர்கள் ஆழமான இசையறிவு பெற்றிருத்தல் அவசியம். மேற்கூறப்பட்டவற்றை வைத்துப் பார்க்கும் வேளையில், ஒருவர் சாதரணமாக ஓர்கன் இசைக்கருவி மட்டும் மீட்டுபவராக இருந்தால் அவர் பாடல் பயிற்சி வழங்கும் திறமை பெற்றவர் என்று கூறுமுடியாது. ஒரு பாடல் அமைந்துள்ள இராக இசைவடிவம், அதற்குரிய தாள நுட்பம் என்பவற்றை விரிவாக அறிந்திருத்தல் அவசியம். பல விடயங்களில் இன்று இசைக்கருவி மீட்டுபவர்கள் இசைஞானம் அற்றவர்களாக இருப்பதனாலும், ஒலிநாடாவில் கேட்கும் பாடலை சரியான தமிழ் இசைச் சுரங்கள் மூலமோ அல்லது மேற்கத்தேச இசைச் சுரங்கள் மூலமோ சுரப்படுத்தி அப்பாடல் இயற்றியவரால் ஏற்கனவே அமைக்கப்பட்ட சரியான **(Original)** இராக வடிவமைப்பைக் கண்டு, பயிற்சி கொடுக்க முடியாதவர்களாய் இருப்பதனாலும், தங்களை அறியாமலே பாடல்களில் உள்ள பிழைசரி உணராமல் பாடல்களைப் பழக்கி விடுகின்றனர். இதன் காரணமாகவே இடத்திற்கு இடம் பாடல்களில் உள்ள அசைவுகள், ஏற்ற இறக்கங்கள் நுட்பங்கள் வேறுபடுகின்றன. ஒரு சில இடங்களில் பாடப்படும் பாடல்கள் இசையமைப்பாளரின் ஏற்கனவே அமைப்பு இராகம், தாளம் மாறி, வேறுவிதத்தில் திருஇசைக் குழுவினர் பாடும் அவல நிலையையும் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் பாடற் பயிற்சி வழங்குபவர்களும் திருஇசைக் கருவி மீட்டுபவர்களும் தம்முடன் சேர்ந்து இசை வழங்கிக் கொண்டிருக்கும் துணைக் கருவியாளர்களையும் வழிநடத்தும் திறமை பெற்றவர்களாகவும் இருத்தல் அவசியம். எனவே இசைக்கருவி மீட்டுபவர்களும், பாடற் பயிற்சி வழங்குபவர்களும் கேள்வி ஞானத்துடன் [illegible] இசைச் சுரங்களைக் கற்றும் பயிற்சி செய்திருத்தல் அவசியம். [illegible] உலக இசைவல்லுனர்கள் கூட ஒருபோதும் இசைக் குறிப்பின் துணைஇல்லாமல் இசைக் கருவிகளை மீட்டுவதை எந்த பிரபல்யமான இசைமேடை நிகழ்வுகளிலும் காணமுடியாது.

### 3.2 திருஇசைக்குப் பொருத்தமான இசைக்கருவி பயன்பாடு

அநேகமான பாடல்கள் கர்நாடக இசையிலும் ஒருசில பாடல்கள் கர்நாடக இசை தழுவிய மெல்லிசையிலும் வெளிவந்துகொண்டிருப்பது பற்றி ஏற்கனவே நாம் அறிந்தோம். இந்தப் பக்தியின் இசைமரபிற்குரிய இசைக்கருவிகளையே திருஇசைக் குழுவினர் பயன்படுத்த வேண்டும். வயலின், ஆர்மோனியம், மிருதங்கம், வீணை, புல்லாங்குழல், கடம் போன்றவற்றோடு சுருதிக்காக சுருதிப்பெட்டி அல்லது தம்பூரா பாவிப்பது நல்லது. மேற்கத்தேச இசைவல்லுனர்களால் கண்டுபிடிக்கப்பட்ட வயலின் என்னும் இசைக்கருவி கர்நாடக இசைமரபுடன் இன்றியமையாத முறையில் ஒன்றித்துவிட்டதனால் அது தவிர்க்கப்பட முடியாதது. தபேலா இசைக்கருவி கர்நாடக இசை மரபைச் சார்ந்ததல்ல. ஆயினும் பஜனை வழிபாட்டிற்கு இக்கருவி பாவிக்கப்படலாம். கர்நாடக இசைக்கு வீணை மற்றும் இரட்டை இதழ் **(Double reed)** ஆர்மோனியம் புல்லாங்குழல் மிகவும் பொருத்தமானவை. ''டோலக்'' என்னும் இசைக் கருவியும் ஒற்றை இதழ் **(Single reed)** ஆர்மோனியமும், இனிமை, பொருத்தப்பாடு குறைவாகையால் தவிர்க்கப்படுவது நல்லது. மின் இணைப்பு ஓர்கன், கிற்றார் போன்ற இசைக்கருவிகள் மேற்கத்தேச இசையில் மட்டும் அமைந்த ஒரு சில பாடல்களுக்குப் பாவிக்கப்படலாம். கர்நாடக இசைப் பாடல்களுடன் இவற்றை இணைப்பதாயின் அதனை மேற்கொள்ளும் இசைக் கலைஞர்கள் இரு இசை மரபுகளிலும் (கீழைத்தேச, மேலைத்தேச) மிகுந்த ஞானமுடையவராக இருத்தல் வேண்டும். நாம் தற்காலத்தில் ஆலயங்களில் பாடுகின்ற கர்நாடக இசையின் வஜ்ர, வக்ர, உபாங்க, பாஷாங்க, ஷாடவ, ஔடவ இராகங்களில் அமைந்த அநேகமான திருஇசைப் பாடல்களுக்கு மேற்கத்தேச இணைச்சுரங்களை, கர்நாடக இசைஞானமில்லாதோர் இணைத்து இசை வழங்கினால் பல அபஸ்வரங்கள் ஒலிப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக கம்சத்வனி, சிவரஞ்சனி, மோகனம் போன்ற இராகங்களில் அமைந்த பாடல்களுக்கு ஆரோகணத்தில் விலக்கப்படும் ஸ்வரங்கள் சில அவரோகணத்தில் சேர்க்கப்படுவதும் மேலும் இவை போன்ற பல இராக நியதிகள் (இராக லட்சணங்கள்) கர்நாடக இசைமரபில் உண்டு. எனவே மேலைத்தேச இணைச் சுரங்கள் **(Chords)** சேர்ப்பதாயின் மிகவும் கவனமாக அவை இணைக்கப்படாவிடில் பிழையான இசைக்கலப்பு ஏற்படும். இவ்வாறான ''திருஇசை'' ஞானமற்றோரின் ஏனோதானோ என்ற இசைக் கலப்பினால் இன்று யாழ். மறைமாவட்டத்தில் உள்ள ஒரு சில ஆலயங்களில் இசைக்கப்படும் பாடல்கள் திருவழிபாட்டைக் குழப்பும் அவலநிலையையும் காண்கிறோம். ஒரு சில இடங்களில் சாதி வேறுபாடு காரணமாக திருஇசைப் பயிற்சியாளர்களையும் திருஇசைக் கருவி மீட்டுபவர்களையும் (மிகவும் அருகாமையிலே வைத்துக்கொண்டு), தூர இருந்து மிகவும் சிரமப்பட்டு அவர்களது திறமைகளை ஆராய்ந்து பாராது அழைக்கின்ற கிறிஸ்தவத்திற்கு ஒவ்வாத தன்மையையும் காண்கிறோம். இந்த வகையில் இளையோர் சமூகம் பரந்துபட்ட கிறிஸ்தவ மனப்பான்மையுடன் செயற்பட விளைந்தாலும் அவர்களுக்குத் தடையாக இருக்கும் பெரியோரின் மனநிலை மாறுவது மிகவும் அவசியம். பெரியோரின் இந்த நச்சு விதைகள் இளையோர் மத்தியிலும் தூவப்படுவது பல இடங்களில் இன்றும் அவதானிக்க முடிகிறது.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாதுகாவலன் 125ஆவது ஆண்டு மலரிலிருந்து...

## யுத்த வடுக்களால் நொந்துபோயுள்ள மனங்களை ஆற்றுப்படுத்துகிறது பாதுகாவலன்

### வலம்புரி ஆசிரியரின் ஆசிச் செய்தி

இலங்கையின் முதலாவது தமிழ்க் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் நூற்றி இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்துவிட்டதென்பதை எண்ணும்போது நெஞ்சம் மகிழ்கிறது.

இற்றைக்கு நூற்றி இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னதாக தொடங்கப்பட்ட பாதுகாவலன் இதழை அன்று முதல் இன்றுவரை பாதுகாப்பாக அழைத்து வருகின்ற பக்குவம் கத்தோலிக்க மதத்தின் நிர்வாகச் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இலங்கையின் வரலாற்றில் எத்தனையோ சஞ்சிகைகள், வாரஏடுகள், நாளேடுகள் தோன்றி மறைந்துள்ளன. ஆனால் பாதுகாவலன் 125 ஆண்டுகளாக தடைகளின்றி ஏற்றமுள்ளதெனில் அதற்கு இறைவனின் ஆசியுண்டென்பது அசைக்கமுடியாத உண்மையாகும்.

யுத்தத்தின் வடுக்களால் நொந்துபோயுள்ள மனங்களுக்கு பாதுகாவலன் ஏடு ஆற்றுப்படுத்துவதாகவும் இறையுணர்வை எடுத்து இயம்புவதாகவும் அமைந்துள்ளது.

இதனால் மனித மனங்களைப் பாதுகாக்கும் ஏடாகவும் பாதுகாவலன் விளங்குகின்றான்.

அவ்வகையில் தமது இடையறாத பணியால் பாதுகாவலனை அழைத்து வரும் அனைவருக்கும் நிச்சயமாக ஆண்டவன் ஆசிகள் உண்டு எனக்கூறி பாதுகாவலனுக்கு எமது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

திரு. சி. வெற்றிவேலாயுதம்
நிர்வாக இயக்குநர்
வலம்புரி, யாழ்ப்பாணம்.

# எனது பார்வையில் பாதுகாவலன்

**இ.ம. ஜெயசீலன்**
**மறையாசிரியர்**

இலங்கையின் தமிழ்க் கத்தோலிக்க முதலாவது வாரப் பத்திரிகையான 'பாதுகாவலன்' தனது 125வது அகவையை நிறைவுசெய்யும் இக்காலத்தில் அதன் அரிய பணியைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். தற்காலத்தில், பல விதமான சமயப் புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிவருகின்றன ஆனால் முன்பு யாழ். திருச்சபையில் ஏன் இலங்கை முழுவதிலுமே சமய அறிவை மக்கள் மத்தியில் பரப்பிட, திருச்சபையில் நடைபெறும் நிகழ்வுகளை மக்களுக்கு தெரிவித்திட அயராது உழைத்து மறைப் பணியாற்றிய அதாவது நற்செய்தி அறிவுப்பணி புரிந்த பெருமை பாதுகாவலனையே சாரும். இறைமக்கள் கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர்ந்திட அவர்கள் தம் மறை பற்றி அறிந்து தெளிந்திட பாதுகாவலன் பங்களிப்புச் செய்துள்ளான். இலங்கைத் திருநாட்டில் பரம்பிய சத்திய வேதத்தைப் பாதுகாக்கும் காவலனாக 125 வருடங்களாக உழைத்து வருகின்றான். 'சத்தியவேத பாதுகாவலன்' என்ற பெயரே இதற்குச் சான்று பகரும்.

பாதுகாவலன் தனது 125வது வருட நிறைவைக் கொண்டாடும் வேளையில் மலரும் சிறப் பிதழுக்கு 'எனது பார்வையில் பாதுகாவலன்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையைப் பாதுகாவலன் ஆசிரியர் கேட்டிருந்தார். எனவே நான் எனது பாதுகாவலன் பத்திரிகை பற்றிய அனுபவத்தை எழுத முற்பட்டேன். நான் பன்னிரண்டு வயதுச் சிறுவனாக இருந்தபோது மாதகல் பங்கின் பங்குத்தந்தையாகப் பணிபுரிந்த அமரர் அருட்திரு வேண்டர்கோன் அடிகளார் பாதுகாவலன் பத்திரிகைகளை வீடுகளுக்குச் சென்று விற்று வருமாறு எங்களை அழைத்தார். நானும் வேறு பீடப்பணியாளரும் வீடு வீடாகச் சென்று அப் பத்திரிகையை விற்றுவிட்டு மகிழ்ச்சியுடன் திரும்புவோம். விற்றுவிட்டு வரும்போது பங்குத்தந்தை எமக்கு மகிழம் பழம், மிட்டாய் தருவார். இப்படித்தான் எனது பார்வையில் முதலில் பாதுகாவலன் பத்திரிகை தெரிந்தது.

பல பாதுகாவலன் பத்திரிகை எனது கைகளினால் விற்கப்படும். பத்திரிகையை ஒருநாளும் நான் படிக்கவில்லை. சில காலத்தின் பின் என்னுடன் பத்திரிகை விற்க வந்த மற்ற நண்பர்கள் விளையாட்டின் காரணமாக நின்றுவிட்டார்கள். எனவே நான் தனியனாக பத்திரிகை விற்கச் சென்றேன். அப்பொழுதுதான் பத்திரிகையைப் படித்துப் பார்க்கத் தொடங்கினேன். அதில்வரும் சிறுவர்பகுதி என்னைக் கவர்ந்தது. சில சமயம் புனிதர்கள் பற்றி எழுதப்பட்டிருக்கும் அவற்றைப் படிக்கத் தொடங்கினேன். படிப்படியாக பாதுகாவலன் பத்திரிகை முழுவதையும் வாசித்து விடுவேன். நான் மறையாசிரியர் பயிற்சிக்கு இந்தியா செல்லும் வரை பாதுகாவலன் விநியோகிப்பவனாகப் பணிபுரிந்தேன். பல விடயங்களை, சிறப்பாக 2ம் வத்திக்கான் சங்கம் பற்றிய விடயங்களை அச் சிறுவயதிலேயே அறியக்கூடியதாகவிருந்தது. பாதுகாவலன் பத்திரிகை படித்தபடியால்தான்.

மறையாசிரியராகப் பணியேற்று பங்குகளில் பணிபுரிந்த காலங்களில் பாதுகாவலனுக்குச் சில கட்டுரைகள் எழுதுவதுண்டு. 86ம் ஆண்டுக்குப் பின் அமரர் அருள்திரு அருமைநாயகம் அடிகளார் பாதுகாவலன் ஆசிரியராக இருந்த காலத்தில் இப் பத்திரிகை பல சிறப்பான அம்சங்களைத் தாங்கி வெளிவந்தது. அப்போது 'அருள் வாக்கு அறிவோம்' என்ற பகுதி விவிலியத்திற்கு ஒதுக்கப்பட்டது. அதில் அறிந்து கொள்ளுங்கள் என்னும் பகுதியைப் பொறுப்பேற்றுப் பழைய ஏற்பாட்டுப் பின்னணியைத் தொடர்ச்சியாக எழுதி வந்தேன். அதிலிருந்து பாதுகாவலன் தொடர் எழுத்தாளனாக மாறிவிட்டேன். இவ்வேளை அமரர் அருமைநாயகம் அடிகளாரை நன்றியுடன் நினைவுகூர்ந்து அன்னாரின் ஆன்ம சாந்திக்காக மன்றாடுகின்றேன். தற்போதைய ஆசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரும் என்னை உற்சாகப்படுத்தி ஆக்கங்கள் வரைய ஊக்கமூட்டுவார்.

பாதுகாவலன் தனது சிறப்பை எண்பிப்பதற்கு சான்று இப் பத்திரிகையின் ஆசிரியராக கடமையாற்றிய அருள்தந்தை அன்ரன் மத்தாயஸ் அடிகளாரின் ஆசிரியர் தலையங்கங்களைத் தாங்கிய 'இன்றைய உலகில் நாம்' என்ற நூல் ஆகும். பாதுகாவலன் பல விடயங்களைத் தாங்கி வெளிவந்தபோதும் அதனுடைய வாசகர்கள் தொகை பெருகவில்லை மிகக் குறைவு. எனவே அதற்கான காரணத்தை ஆய்ந்து அறிந்து தரமான தாக்கமான விடயங்களைச் சுடச் சுடத் தாங்கி வெளிவர செய்ய வேண்டியது ஆசிரியர் குழாமின் கடமையாகும். இன்றைய மனித சமுதாயத்தின் முன்னேற்றம், அதன் உறுப்பினரிடையே உள்ள நெருங்கிய பிணைப்புக்கள் ஆகியவற்றின் காரணமாக, செய்தித்துறை மிகவும் பயனுள்ளதாகவும், இன்றியமையாததாகவும், மாறிவிட்டது... மனிதர்கள் தனி ஆட்கள் என்ற முறையிலோ சமூக உறுப்பினர் என்ற முறையிலோ தம்மைத் தொடுகின்றவை பற்றிய செய்திகளைத் தத்தம் நிலைமைக்கு ஏற்றவாறு அறிகின்ற உரிமை சமுதாயத்திற்கு உரித்தானது. இந்த உரிமையைச் சரியான முறையில் செயல்படுத்துவதற்கு, அறிவிக்கப்படும் பொருளைப் பொறுத்தமட்டில் செய்தி எப்போதும் உண்மையான்தாகவும், நீதியினின்றும், அன்பினின்றும் வழுவாத வகையில் முழுமையானதாகவும் இருக்கவேண்டும். 'செய்தியைத் திரட்டுவதிலும், பரப்புவதிலும், ஒழுக்கநெறிகளையும், தனி மனிதனின் முறையான உரிமைகளையும், ஒழுங்குமுறைகளையும் நுணுக்கமாகக் காக்க வேண்டும்.' *(சங்க ஏடு சமூகத் தொடர்புக் கருவிகள் இல.5)* கூறுகிறது.

எனவே தற்கால போர்ச் சூழலில், விசுவாசத்துக்கான பல தாக்கங்கள் சபைகளூடாக ஏற்படும் இக்காலத்தில், எம் கத்தோலிக்க மக்களைக் காக்கும் காவலனாக இப் பத்திரிகை பல தரமான அம்சங்களைத் தாங்கி தீர்க்கநோக்குடன் கூடிய விதமாக செய்திகளை கட்டுரைகளைத் தாங்கி வெளிவர வேண்டும் என்பது பலரின் ஆசையாகும். தொழில்நுட்பக் கருவிகள் மலிந்த இக்காலத்தில் பாதுகாவலன் அவற்றைப் பயன்படுத்தி அழகான ஆழமான பலதரப்பட்ட மக்களும் விரும்பிப்படிக்கும் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரவேண்டும் என்று ஆசிக்கின்றேன்.

# காவலன் களஞ்சியத்தில் கண்டவை சில...

**எஸ். யேசுதாஸ் கொழும்புத்துறை**

ஒரு பத்திரிகையானது மக்கள் மத்தியில் பெரு வரவேற்பையும் நல் ஆதரவையும் பெற்று தொடர்ந்து வெளிவருவதற்கு அப் பத்திரிகை தேர்ந்துகொண்ட பெயரும் வடிவமைப்பும் விலையும் முக்கிய காரணமாக அமைகிறது.

மேலும் அவ் இதழ் தான் சார்ந்து நிற்கும் மண்ணினதும் மக்களினதும் அரசியல், சமூக, ஆன்மீக, கலை, கலாச்சார விழுமியங்களை நடுநிலையுடன் வெளிக்கொணரும் ஒரு சிறந்த ஊடகமாகத் திகழும் போதுதான் நீண்டகாலம் வாசகர்களின் நெஞ்சத்தில் காத்திரமான இருப்பைப் பெறமுடியும்.

இந்த வகையில் இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க ஏடான 'பாதுகாவலன்' தொடர்ந்து 125 ஆண்டுகள் நிறைபணியாற்றுவதற்குக் காரணம் மேற்கூறிய அம்சங்களை அனுசரித்து வருவதாகும். 'பாதுகாவலன்' என்னும் பதத்தின் பொருள் விளங்கும் வண்ணம் இன, மத, மொழி மீதான நெருக்கீடுகளுக்கு, உரியமுறையில் குரல் கொடுத்து வருவது அதன் முக்கிய சிறப்பம்சமாகும். இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தினால் 2000ம் ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான 'தேசிய விருதைப்' பெற்றுள்ள இப்பத்திரிகை தன் ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை பாதுகாவலன் பெயரை மையப்படுத்தி பல்வேறு அச்சு எழுத்து வடிவங்களில் உலாவந்து கொண்டிருக்கின்றது.

அவற்றில் சிலவற்றை 125வது ஆண்டு நிறைவு மலரில் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது மகிழ்வும், பயனும், பழமையை மீட்டிப் பார்க்கும் ரசனையும் கிட்டும் என நம்புகிறேன்.

1876ஆம் ஆண்டு மாசி மாதம் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு முதலில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆங்கிலத்தில் **THE JAFFNA CATHOLIC GUARDIAN** எனவும் தமிழ் வெளியீட்டில் 'சத்திய வேத பாதுகாவலன்' என்றும் தன் நாமத்தைச் சூடிக் கொண்டது. பின்னர் சில ஆண்டுகளில் ஆங்கிலப் பதிப்பில் **'CATHOLIC GUARDIAN'** என்றுமாறும் காணமுடிகிறது.

இது தவிர அன்றைய நாட்களில் பத்திரிகையின் நீள அகலமும் இன்றைய பாதுகாவலின் இரு மடங்காக அமைந்திருந்துள்ளது. இவ்விருமொழி வெளியீடுகளும் இந்தியா, மற்றும் ஐரோப்பிய நாடுகள் அடங்கலாக விற்பனையாகியுள்ளன. முதல் அரைநூற்றாண்டு இதழ்களைப் புரட்டிப் பார்க்கும்போது இந்திய, ஆங்கிலேய அருட் தந்தையர்கள், எழுத்தாளர்களின் ஆக்கங்களே அநேக இடங்களில் தடம் பதித்துள்ளன.

அச்சுக்கலையின் வளர்ச்சியாலும், தொழில்நுட்பத்தினாலும் வெவ்வேறு எழுத்து வடிவங்களில் கவர்ச்சிகரமான மாதிரிகளில் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளதை இடைக்கால இதழ்கள் காட்டி நிற்கின்றன. ஒவ்வொரு ஆசிரியரும் காலத்துக் காலம் எழுத்தமைப்பில் மாற்றங்களை அறிமுகப்படுத்தியுள்ளனர். பாதுகாவலன் பத்திரிகைக் களஞ்சியத்தில் இருந்து எடுத்த பிரதிகள் சில இப்பகுதியில் இவற்றைப் புலப்படுத்துகின்றன. 1968 வரை 'சத்தியவேத பாதுகாவலன்' எனவும், 1969 தொடக்கம் 'காவலன்' ஆகவும் கைகளில் தவழ்ந்தது. 1980இல் இருந்து இன்றுவரை 'பாதுகாவலன்' ஆகப் பவனி வருகிறது. வீட்டுக்கொரு காவலன் விசுவாசத்தின் பாதுகாவலனாக இவ்வார ஏடு 1998ஆம் ஆண்டு ஆனிமாதம் 'ஒவ்செற்' கணணி முறையில் அச்சிட்டு வெளியிடப் பட்டது. யாழ்ப்பாணத்தில் முதன்முதலில் கணணி அமைப்பில் வெளியான பத்திரிகை என்ற பெருமையும் இதனைச் சாரும்.

மேலும் இக்காலப் பகுதியில் பாதுகாவலன் இலச்சினையும் தயாரிக்கப்பட்டது. எமது பிரதேசத்தின் மக்கள், வளங்கள், கல்வி, ஆன்மீகம் என்பவற்றுடன் இணைந்து பாதுகாவலன் சுடர்விட்டு கிறிஸ்துவின் ஒளியை உலகெங்கும் பரப்ப உழைப்போம். பணியும், வாழ்வும், உண்மையுமே எமது முனைப்பான முன்னெடுப்பாக அமைந்துள்ளது எனவும் இச்சின்னம் எடுத்து இயம்புகிறது. இதே இலக்கில் தொடர்ந்து தடம்பதித்து மேலும் பல நூற்றாண்டுகள் பாதுகாவலனின் பெயர் நிலைப்பது வாசக உள்ளங்களின் ஆதரவிலும் ஆலோசனையிலும் பங்களிப்பிலுமே தங்கியுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாசம் குணமளிக்கும் என வைத்தியர் இப்போது ஏன் நம்புகின்றனர்?

வாஷிடங்கனிலுள்ள ஜோர்ஜ்டவுண் பல்கலைக்கழக மருத்துவமனையில் ஒரு நோயாளியின் படுக்கையைச் சுற்றி வைத்திய மாணவர் குழு ஒன்று நிற்கின்றது. படுக்கையிலிருந்த டொம் லோங் ஒரு குடும்பச் சண்டையில் இதயம், வயிறு, மண்ணீரல் ஆகிய உறுப்புக்களில் குத்தப்பட்டிருந்தான். ஏழு சத்திர சிகிச்சைகளின் பின் அவன் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டான். அவனது வயிற்றிலிருந்த பெரிய காயத்துக்கு தோல் ஒட்டுமுறையில் சிகிச்சை செய்யப்பட்டிருப்பினும் ஒரு வருடமாகியும் இன்னும் குணப்படவில்லை. ஆகவே 1999 டிசம்பரில் அவன் மீண்டும் சத்திரசிகிச்சைக்காக வந்திருந்தான்.

இதயத்தில் காயம்பட்டும் உயிர்வாழ்ந்த ஒரு சிலரில் ஒருவனான லோங் தனது உணர்வுகளைப் பற்றிப் பலருக்கு எடுத்துக்கூறியிருக்கிறான். அவனைப் பேட்டி கண்ட முதலாம் ஆண்டு வைத்திய மாணவியான ரேகன் போளி ''எங்கிருந்து இந்த சக்தியைப் பெற்றுக்கொண்டீர்கள்?'' என்று வினவினாள். லோங் தான் உயிர்தப்பியமைக்கு தனக்குக் கிடைத்த சிறந்த வைத்திய உதவிக்கு அப்பால் ஒன்று இருப்பதாகவும், அதுதான் கடவுள் என்றும் கூறினான். நோயாளியின் வைத்திய வரலாற்றைக் கேட்டுக்கொண்டிருந்த மாணவரின் கவனத்தை இது ஈர்த்தது. கேள்விகள் தொடர்ந்தன.

''மதத்துக்கும் வைத்தியத்துக்கும் பிரிக்க முடியாத தொடர்பு உண்டு. அதை மீண்டும் மீண்டும் காண்கிறோம். நோயாளருக்கு சக்தியைக் கொடுப்பது நிறுவனமான மதங்கள் மட்டுமல்ல, எல்லோரிடமும் ஆன்மீகம் உண்டு. ஒருவர் வாழ்வுக்கு அடிப்படையில் அர்த்தம் கொடுப்பததான் அது'', என்று போளி கூறுகிறாள்.

ஆன்மாவுக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு பற்றிய நம்பிக்கை மிகப் பழமையானதாக இருப்பினும், வைத்தியம் விஞ்ஞான ரீதியாக மாறியபின், மேலைநாட்டு வைத்தியர்கள் ஆன்மீகம் மதநம்பிக்கை ஆகியவற்றிலிருந்து விலகிச் சென்றுவிட்டனர். ஆனால், தற்போது நோயாளர் ஆரோக்கியத்தையும் மத நம்பிக்கையையும் தொடர்புபடுத்தும் விஞ்ஞான ஆய்வுகளும் வைத்திய உலகை மெல்ல மனம் மாற்றி வருகின்றது. விஞ்ஞான சஞ்சிகைகளும், புதிய நூல்களும் இக் கருத்தை எடுத்தாளுகின்றன. விசுவாசம், குணப்படுத்தல் பற்றிய மகாநாடுகளுக்கு வைத்தியர் அதிகமதிகமாக சமூகமளித்து வருகின்றனர்.

''பொதுவாக ஆன்மீகத்துக்குத் திரும்பிவரும் போக்கில் இதுவும் ஒரு அம்சம் என நான் எண்ணுகிறேன்'' என்று வாஷிங்டன் யூதரின் குணப்படுத்தும் நிலையத்தை 6 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்துவைத்த உளவியல் மருத்தவரான கரோல் ஹவுஸ்மன் கூறுகிறார். இந்த நிறுவனம் நோயுற்ற அனைவருக்கும் ஆன்மீக ஆதரவுக் குழுக்களை நடத்திவருகிறது. ''இரண்டாம் உலகப் போரின் பின் பிறந்தவர்கள் தமது பெற்றோர் வயது முதிர்வதையும், தமக்கு வயதேறுவதையும் காண்கிறார்கள். அர்த்தத்தையும் ஆழத்தையும் தேடுகின்றனர்''.

### மதத்தின் பின்னால் விஞ்ஞானம்

அண்மையில் நடைபெற்றுவரும் ஆய்வுகள் ஆலயத்துக்கும் ஆய்வுகூடத்துக்கும் இடையிலுள்ள தடைச்சுவரைத் தகர்த்து வருகின்றன. உதாரணமாக, வாரத்துக்கு ஒரு முறையிலும் அதிகமாக வழிபாடுகளில் கலந்துகொள்பவர்கள், கலந்துகொள்ளாதவர்களைவிட சராசரியாக 7 ஆண்டுகள் நீடித்த ஆயுளை உடையவர்களாய் இருக்கின்றனர் என ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

1998ல் வட கரோலினாவிலுள்ள டியூக் பல்கலைக்கழக வைத்திய நிலையத்தில், ஹால்ட் கோனிக், டேவிட் வலாசன் என்னும் இரு வைத்தியர்கள் வாராந்தம் ஆலயம் செல்லும் மக்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவது குறைவு என்றும், அவ்வாறு அவர்கள் வந்தாலும், குறைவாக ஆலயம் செல்பவர்களைப்போல் அவ்வளவுநாள் தங்கவேண்டியிருப்பதில்லை என்றும் கண்டுபிடித்தனர்.

இந்த இடைத்தொடர்பை ஓரளவுக்குப் பின்வருமாறு விளக்கலாம். ஆலயம் செல்பவர்கள் புகைத்தல், குடித்தல், ஒழுக்கக்கேடான பாலுறவுகளில் ஈடுபடுவது குறைவாகவேயிருக்கும். அத்துடன் அவர்களுக்கு சமூக ஆதரவு இருக்கக்கூடிய சாத்தியக்கூறுகளும் அதிகம். ''விசுவாசம் : செபத்தின் குணப்படுத்தும் ஆற்றலுக்குச் சான்று'' என்னும் நூலில் டேல் மத்தியூஸ் என்பவர் நிறுவனமான மதம் சமுதாயத்தில் உதவிசெய்யவும் உதவிபெறவும் வழிசெய்கின்றது என்று கூறுகிறார். தனிமைப்படுத்தப்பட்டவர்கள் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் நலக்கேடாக இருக்கும் சாத்தியக் கூறு அதிகம்.

ஆனால் உளநோய் மருத்துவர் மாட்டீன் ஜோன்ஸ் போன்ற சில ஆய்வாளர்கள் ஹவேட் பல்கலைக்கழகத்தில் தமது வகுப்புகளில் விசுவாசத்துக்கும் குணமாதலுக்குமுள்ள இடைத்தொடர்பை ஆராய்ந்து வருகின்றனர். ஆரோக்கியத்தின் மீது ஆன்மீகம் ஏற்படுத்தும் விளைவுகளை முழுமையாக விளக்குவது அவ்வளவு முக்கியமில்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

''எத்தனையோ மருந்துகள் எவ்வாறு வேலைசெய்கின்றன என்பது எமக்குத் தெரிவதில்லை. காரண காரியங்களை அவதானிப்பதால் அவை வேலை செய்கின்றன என்பது எமக்குத் தெரியும். அதுபோன்றே, ஒருவரது ஆன்மீக உணர்வு அவரது உடல் நலத்தில் ஏற்படுத்தும் விளைவுகளை நாம் காணக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அதைப் பயன்படுத்தினாலென்ன?'' என்று ஜோன்ஸ் கூறுகிறார்.

''நோயாளி ..மருந்தென நினைக்கும் ஒன்றை கொடுப்பதால் குணமடைவது போன்றதே இதுவும். எவ்வாறு இது வேலை செய்கின்றது? நம்பிக்கைதான் அது மிக சக்திவாய்ந்தது,'' என்று அவர் மேலும் கூறுகின்றார்.

இதுபோன்றதே குற்ற உணர்வும். கொலம்பியா கொலேஜைச் சேர்ந்த பேராசிரியர் றிச்சேர்ட் ஸ்லோவன் நோயாளரின் மத நம்பிக்கைகளில் வைத்தியர் தலையிடுவதை எதிர்க்கிறார்.

பக்தி ஆரோக்கியத்துக்கு ஏதுவானது என்ற நிலைப்பாட்டை வைத்திய சாஸ்திரம் எடுக்குமானால், நோயுற்றிருப்பது அல்லது குணமடையாதிருப்பது சமய உணர்வுக் குறைபாட்டின் விளைவு என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது.

தமது சிகிச்சை முறையில் ஆன்மீகத்தைச் சேர்த்துக் கொள்ளும் வைத்தியர்கள்கூட, வைத்திய சிகிச்சைக்கு ஒரு துணைக்கருவியாகவே, அதுவும் நோயாளி தனது நம்பிக்கைகளைப் பற்றி வெளிப்படையாகப் பேசுவதை விரும்பினால் மட்டுமே விசுவாசத்தைப் பயன்படுத்துவது தக்கது என்பதை ஒப்புக்கொள்கிறார்கள்.

1996ல் வேர்ஜினியாவிலுள்ள ஆனிங்டன் மருத்துவமனையில் அவசர சிகிச்சையறை மருத்துவராக இருந்த ஜோ செமஸ் என்பவருக்கு சதையப் புற்றுநோய் இருப்பதாகவும் அவர் 5 ஆண்டுகள் உயிர்வாழ்வதற்கு 50% வாய்ப்பே உள்ளதென்றும் கூறப்பட்டது. செமஸ் ஒரு கத்தோலிக்கர். ஆனால் 1962 கியூபா ஏவுகணைப் பிரச்சினைக்குப் பின் அவர் பாவசங்கீர்த்தனத்துக்கு சென்றதில்லை. ''மறுநாள் நாம் இறந்துவிட்டால் என்னசெய்வது என்று நாம் எல்லோரும் அன்று பாவங்கீர்த்தனம் செய்தோம்'' என்கிறார் 51 வயதான, 4 பிள்ளைகளுக்குத் தந்தையான செமஸ்.

செமசுக்கு நம்பிக்கையில்லாவிடினும், வியாபாரத்தில் காரியவாதியான அவரது மனைவி எலோனீட் பிறரை அவருக்காக மன்றாடும்படி கேட்டபோது அவர் தடைசொல்லவில்லை. அது தீங்கற்றது என்பது மாத்திரமல்ல, அண்மையில் அவர் மனதை சாந்தப்படுத்தவுதற்கு தியானம், ஆழ்ந்த செபம் ஆகியவற்றைப் பயன்படுத்துவதுபற்றி வாசித்திருந்தார். ''இது பற்றி சர்ச்சைகள் இருந்தபோதும் அழுத்தம் நோய்த் தடுப்புதொகுதியைப் பாதிக்கிறது என்பதற்கு சான்று உண்டு. நோய்த்தடுப்புத் தொகுதியை வலுப்படுத்த எது செய்தாலும் அது எனக்குச் சரிதான்.''

ஜோவுக்கு பரிசோதனைக்காக சத்திரசிகிச்சை செய்வதற்கு முதல்நாள் எலோனீட் தனது ஆலயத்தில் குணமாக்கல் வழிபாடு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். ''எல்லோரும் என்மீது கைவைத்து கீர்த்தனைகளைப் பாடினார்கள். நம்பமுடியவில்லை, இந்தக் குழுமத்தின் சக்தியை''.

செமஸின் வயிற்றிலிருந்த கட்டி முக்கிய இரத்த நாடிகளைச் சுற்றியிருந்தபடியால் சத்திரசிகிச்சையால் அதை அகற்ற முடியவில்லை. கதிர்ச்சிகிச்சையும் இரசாயனச் சிகிச்சையும் அதனை சுருங்கச் செய்தன. செமஸ் அதை சத்திரசிகிச்சையால் அகற்றும்படி கேட்டுக்கொண்டார். 1998ல் 11 மணித்தியால அறுவை சிகிச்சையால் அது அகற்றப்பட்டது. இன்று, செமஸ் சிகிச்சைக்கு வந்து 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவ [illegible] எதுவுலும் காணப்படவில்லை. அவரது சதையத்தின் பெரும் பகுதி அகற்றப்பட்டுவிட்ட போதிலும் தனக்கு நல்ல சக்தி இருப்பதாக அவர் கூறுகிறார்.

''செபத்தினால் நான் குணமடைந்ததாக யாரும் நினைக்க வேண்டுமென நான் விரும்பவில்லை. இது கதிர்ச்சிகிச்சையால், சத்திரசிகிச்சையால் நடந்தது.

''ஆனால், எனக்கு கூடிய நம்பிக்கை ஏற்பட்டது. குணமாதல் என்பது முழுமையடைவதற்கு தாம் இருக்கும் நிலையை உணர்வதற்கு, பிறரோடு தொடர்புகொள்வதற்கு, அன்பு செய்வதற்கு வழிகோலுவதாகும். உடல் நலிந்திருக்கும் போது ஏற்படும் ஆன்மீக வளர்ச்சி ஆச்சரியமானது. நான் விழிப்புப் பெற அந்த அழைப்பு எனக்குக் கிடைத்தது'' என்று செமஸ் கூறுகிறார்.

### மருந்துசீட்டுச் செபம்

1980களில் மருத்துவர் மத்தியூஸ் தொழில் செய்ய ஆரம்பித்த புதிதில், உடற்சிகிச்சைக்கு அப்பால் நோயாளிகள் தன்னிடமிருந்து எதையோ எதையோ எதிர்பார்க்கிறார்கள் என்று உணரலானார் – அவரது ஆழமான விசுவாசத்தை அறிந்த பலர் அவர் தம்மோடு செபிக்க வேண்டுமென விரும்பினர்.

''எனக்கு முன்மாதிரிகள் எதுவும் இருக்கவில்லை. வைத்தியர் – நோயாளி உறவில் நான் இணைத்துக்கொண்ட ஆன்மீகம் செவிமடுத்தல், கவனித்தல், மக்கள் தமது விசுவாசத்தை ஆதாரமாகக் கொண்டிருப்பதைக் காணல் ஆகியவை சம்பந்தப்பட்டதாகும்.''

ஒரு கிராம வைத்தியரின் மகனும், மறைபோதகரின் பேரனுமான மத்தியூஸ் வாஷிங்டனில் உள்ளக மருத்துவம் பார்த்துவருகிறார். அவர் ஸ்டெதஸ்கோப்பை பயன்படுத்துகிறார். எக்ஸ்றே மீது நம்பிக்கை வைக்கிறார். தேவையானபோது மருந்துகளைக் கொடுக்கிறார். ஆனால், நோயாளரின் வைத்திய வரலாறுகளை எடுக்கும்போது அவர்களது மதநம்பிக்கையின் தன்மை பற்றி விசாரிக்கிறார்.

''அவருக்கு ஆழமான ஓர் ஆதாரம் இருப்பதாகத் தோன்றுகிறது'' என அவரது நோயாளர் ஒருவர் கூறுகிறார். அவர் ஒரு உயிரியல் தொழில்நுட்ப ஆலோசகர் நிரந்தர நோய்க்குட்பட்டவர். 47வயதில் பலவித நோய்களால் துன்புறுபவர். சீர்குலைக்கும் உயிராபத்தான நோய்களோடு வாழ்வது இலகுவானதல்ல. தனது ஆன்மீகத்தை வளர்த்து கடந்த 6 ஆண்டுகளை ஒட்டிவிட்டதாகச் சொல்கிறார். மத்தியூஸ் சிலவேளைகளில் அவரது மருந்துச்சீட்டில் வேதாகம வாசகங்களைக் குறிப்பதும், ஆன்மீக துணைபுரிபவர்களிடம் அனுப்புவதும் உண்டு. அவரது உடல்நிலை ஒருநிலைக்கு வந்தபின் அதில் ஒருவித மந்திரசக்தி இருப்பதாகக் கூறுகிறார். சில பின்னடைவுகள் ஏற்பட்டபோதிலும் ''எனது விசுவாசம் எனக்கு ஒரு சமநிலையைத் தருகிறது. அப்போது நான் எனது நோயை சுமையாக உணர்வதில்லை'' என்கிறார்.

### வைத்தியரே, உம்மைக் குணப்படுத்தும்

வைத்திய நிறுவனத்தினர் நம்பிக்கை வைக்கக்கூடிய ஒன்று தமக்கே பயன்படக்கூடும் என்பதால் ஆன்மீகத்தைத் தழுவுகிறார்கள் எனலாம். வாஷிங்டனிலுள்ள ஜோர்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் துணைப் பேராசிரியராக உள்ள டாக்டர் கிறிஸ்டீனா புச்சல்ஸ்கி பின்வருமாறு கூறுகிறார். வைத்தியர்கள் ஒரு சேவைக்கு நோயாளியின் நலனைத் தமது நலனுக்கு மேலாகக் கருதும்படி அழைக்கப்படுகிறார்கள். இது ஒரு ஆன்மீக அழைப்பு. ஆனால், அதை செயற்படுத்துவதிலும், மருத்துவத்தை ஒரு தொழலாக்குவதாலும், அந்த நோக்கத்தையும், அர்த்தத்தையும் இழந்துபோகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.''

ஆயினும், வைத்தியரும் நோயாளிகளும் அந்த விசுவாசத்தை வைத்திருக்கவே விரும்புகின்றனர். 1996ல் அமெரிக்க வைத்தியக் கல்லூரிகள் சங்கம் நோயாளிகளாக வழக்கறிஞர்கள் வைத்தியர்கள், காப்புறுதி அதிகாரிகள், வைத்திய மாணவர்கள், சமூக அங்கத்தவர்கள் ஆகியோரைப் பேட்டி கண்டு வைத்திய கல்லூரிகளுக்கு இலக்குகள் குறித்து ஓர் அறிக்கை தயாரித்தது. பண்பாடு, ஆன்மீகம், வாழ்வின் முடிவு போன்ற கருத்துக்கள் குறிப்பாக வெளியிடப்பட்டன. கல்லூரிகள் இதற்கு பதிலுறுத்தன; 1992ல் ஒருசில கல்லூரிகளே ஆன்மீகத்தைக் கற்பித்தன. ஆனால், இன்று அமெரிக்காவிலுள்ள 125 வைத்தியக் கல்லூரிகளுள் 50 கல்லூரிகளின் பாடத்திட்டத்தில் அது உண்டு.

ஜோர்ஜ்டவுணில் உயிரியல் இரசாயன பாடங்களுக்கிடையில் சுகநலம் பேணுவதில் மத பாரம்பரியங்கள் என்ற பாடத்தைக் கற்கின்றனர். ஆன்மீகத்துக்கும் ஆரோக்கியத்துக்குமுள்ள தொடர்பு பற்றியும், மருத்துவ நோக்கில் உலகின் பிரதான மதங்கள் பற்றியும் கற்பிக்கப்படுகிறது.

மதகுருக்கள் – வைத்தியர்கள் யூதம், பௌத்தம், இஸ்லாம், இந்து, ரோமன் கத்தோலிக்கம், புரொட்டஸ்தாந்து மதங்களின் நோக்குகளை விளக்குகின்றனர். சில மத நம்பிக்கைகள் கருணைக்கொலை, இரத்த தானம், மருந்துகளின் உபயோகம், தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியிருப்பதை மாணவர் அறிகின்றனர். ஒரு நோயாளியின் நம்பிக்கைகளை சாதாரணமாக அச்சுறுத்தலின்றி அறிந்து, அவரது ஆன்மீக வரலாற்றை வைத்திய வரலாற்றுக்குள் சேர்த்துக்கொள்வது எப்படியென்று அவர்களுக்கு கற்பிக்கப்படுகிறது. நோயாளிக்கு தேவை ஏற்படின் மருத்துவமனைக் குருக்கள் போன்ற மத ஆளணியினரைப் பயன்படுத்தவும் கற்றுக்கொள்கின்றனர்.

### முழுமையான சிகிச்சை

அமெரிக்க வானொலி அறிவிப்பாளரான டியான் றேம் தனது குரல் அடங்கிப்போவதை உணர்ந்து வைத்திய ஆலோசனைகள் பெற்று, பரிசோதனைகள் செய்து சிகிச்சைகளை மேற்கொண்டாள். ஆனால், 7வருட

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாசம் குணமளிக்கும் என வைத்தியர் இப்போது ஏன் நம்புகின்றனர்?

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சைகள் பயனற்றுப்போக 1998ல் அவளது குரலில் நடுக்கம் ஏற்பட்டபடியால் அவள் தனது வேலையைவிட வேண்டியதாயிற்று.

எனவே, அவளது நண்பரொருவர் குணமளிக்கும் திருச்சடங்கிற்கு அவளை அழைத்தபோது, நல்ல காலத்திலும் செபத்தின் மூலம் திடம் பெற்றவளான டியான் அதற்கு இசைந்தாள். துணைஆயரான அந்த நண்பரும் இன்னொருவரும் பல நூற்றாண்டு பழமைவாய்ந்த குணமளிக்கும் திருச்சடங்கை மேற்கொண்டனர். றேமின் தலைமீது கைவைத்து அவளது குரலுக்காகச் செபித்தனர். அது முடிந்த பின்னரும் அவளது குரலில் ஒரு மாற்றமும் இருகப்கவில்லை. ஆனால், அவள் தனக்கு ஏதோ நலன் ஏற்பட்டதாக உணர்ந்தாள். ''எனக்கு மின்னல் அடிக்கவும் இல்லை. புதிய சக்தி பிறக்கவும் இல்லை. என்னுள் ஒரு அமைதியை உணர்ந்தேன். அவர்களது செபமும் செயல்களும் எனக்குத் துணைபுரியும் என்ற உணர்வும் ஏற்பட்டது''

றேம் தனது ஆலயத்தில் தொடர்ந்து வாராந்தம் குணமளிக்கும் சடங்கிற்கு சமூகமளித்தாள். ஆனால், அவள் வைத்திய சிகிச்சையை விடவில்லை. இரு மாதங்களுககுப் பின்னர் ஜோண்ஸ் ஹொப்கின்ஸ் வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் போல் பிளின்ற், டாக்டர் ஸ்டீவன் றீச் என்பவர்கள் அவளுக்கு டிஸ்போணியா என்னும் நோயிருப்பதாகக் கண்டுபிடித்தனர். இந்நோய் குரலெழுப்பும் தசைநார்களைப் பாதிக்கின்றது. அத்தசைநார்களை தற்காலிகமாக விறைக்கச் செய்வதற்காக அவர்கள் ஊசிமருந்துகளை சிபாரிசு செய்தனர். றேம் அக்குபங்சர் சிகிச்சையும் எடுத்தாள். சிகிச்சைகள் வேலை செய்கின்றன.

''குணமளித்தல் என்பது ஏற்றுக்கொள்ளுதல், தன்னையும் பிறரையும் வேறொரு விதத்தில் அணுகுதல், துன்பத்தில் அமைதி இழக்காதிருத்தல் போன்ற எந்த வடிவிலும் வரலாம்'' என்கிறார் றேம். மற்றவர்களைப் போலவே விசுவாசம் மருத்துவ சிகிச்சையோடு இணைந்துசெல்ல வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

புற்றுநோயிலிருந்து உயிர் தப்பிய ஜோன்ஸ் கூறுகிறார் நோய் அடிப்படையில் உடல் சார்ந்தது. ஆனால், அதற்கு ஒருபடிநிலை உண்டு. அவை உடல் மட்டம், உணர்ச்சி மட்டம், புத்தி மட்டம், ஆன்மீக மட்டம் என்பவை. நோய்க்கு சிகிச்சை செய்வதை விட்டு முழு ஆளுக்கும் சிகிச்சை செய்யும் ஒரு சிறிய மாற்றம் வைத்திய முறையில் ஏற்படும் என ஜோன்ஸ் கருதுகின்றார்.

''நோயைப் பொறுத்தமட்டில் விஞ்ஞானம் நினைக்கமுடியாத சாதனைகளைச் செய்துள்ளது. நாம் 20ம் நூற்றாண்டில் ஆயுட்காலத்தை மூன்றிலிரண்டு மடங்கு அதிகரித்துள்ளோம் ஆனால், விஞ்ஞானம் தான் எல்லாம் என்பதல்ல.

ஒருவரது உடற்கூறுகளில் மட்டும் கருத்தைச் செலுத்தும்போது நினைக்கமுடியாத ஒரு நம்பிக்கைப் பிணைப்பு உண்டு. அதற்கு அதிக நேரம் தேவையில்லை. திறந்த இதயத்துடன் பரிசோதனை அறைக்குள் போனாற் போதும்'' என புச்சல்ஸ்கி கூறுகிறார்.

வேறுவிதமாகக் கூறின் விசுவாசக் குணப்படுத்தல் அல்ல, குணப்படுத்தலில் விசுவாசம்.

*நன்றி Readers Digest செப. 2001*

# இறப்பு இறுதியல்ல... ஆரம்பம்


**P.A. யேசுதாஸ்**
**(நெடுமாறன்)**
**புனித வளனார் குருமடம்**

கார்த்திகை மாதம் என்றால் மண்ணக வாழ்வில் மனித வாழ்வை நிறைவுசெய்து சென்றவர்களை விஷேடமாக நினைக்கும் ஒரு மாதம். இந்த மாதத்தில் இறந்தவர்கள் ஆன்மாக்கள் ஈடேற்றம் பெற அவர்களுக்காக செபிக்க வாழும் ஆன்மாக்களுக்கு பாரிய பொறுப்பும் கடமையும் உண்டு. இறப்புக்கள் அதிகமாகி இன்னலுறும் எம் மண்ணில் இந்த இறந்தவர்களுக்காக செபிப்பதென்பது முக்கியமானதொன்றாகின்றது.

மனித வாழ்வில் எந்த நிலையில் இருந்தாலும் மரணம் என்பது நிச்சயப்படுத்தப்பட்டதொன்று என்பதை யாம் அறிவோம். இந்த இறப்புடன் மனித வாழ்வு முடிந்துவிடுகிறது என இவ்வுலகம் போதிக்கின்றது. ஆனால், இந்த இறப்புடன்தான் மேன்மையான ஒரு உன்னத வாழ்வு உதயமாகிறது என திருச்சபை தாய் கற்பிக்கிறாள். இதை இறைவன் தன் மகன் வழியாக அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு எனும் 3 முக்கிய நிலைகளூடாகத் தெட்டத் தெளிவாகக் காட்டியுள்ளார். இறப்பு என்பது எம் மனித குலத்துக்கு எம் ஆதிப் பெற்றோர் விட்டுச்சென்ற பரம்பரை சொத்து. இறப்பு என்பது பாவத்தின் வழியாக வந்த பரிசு என்பதும் யாம் அறிந்த வேதாகம உண்மை. ஆனால், மனம் திரும்புதலால் இறைவனுக்கு ஏற்ப வாழ்வு வாழ்தலால் இந்த இறப்பு விண்ணகப் பிறப்பாக புதிய வாழ்வின் ஆரம்பமாக மாறும் என்பது இறைவன் தரும் மறைஉண்மை. இதை நிரூபிக்கவே, எண்பிக்கவே தன் 3 வருட பகிரங்க நற்செய்திப் பணிவாழ்வில் சில மனிதர்களை உயிர்ப்பிப்பதை உன்னத வாழ்வு அளிப்பதை இறைபடிப்பினைகள் அடங்கிய திருநூல் கோடிட்டுக் காட்டி நிற்கின்றது. இந்த இறப்பின்பின் மனித வாழ்வுக்கு யாது நிகழ்கின்றது என அறிய இந்த மனித இனத்துக்கு ஆவல். அதை யாரும் அனுபவரீதியாக வந்து சொல்லமாட்டார்களா? என எதிர்பார்க்கிறது. ஏங்குகிறது. இதற்கே புனித பவுல் குறிப்பிடுகின்றார் ''நாம் யாவரும் சாகமாட்டோம் மாற்றுருப் பெறுவோம்''. இந்த இறையடியானின் வார்த்தையில் எத்தனை உண்மைகள் உறங்குகின்றன. இது தான் எம் இறப்பின் பின் நிகழ்வது. இதை நாம் சிறந்த முறையில் விளங்கிக்கொள்ள வண்ணத்துப்பூச்சியின் வாழ்வை எடுப்போம். இதனுடைய ஆரம்பம் என்ன? ஒரு மயிர்கொட்டி. அதாவது ஒரு புழு. பின்னர் இது இறக்கிறது. அதாவது தன்னை மாற்றி மயிர்கொட்டியாகத் தன்னை அழித்து வண்ணத்துப்பூச்சியாக ஒரு சுதந்திரப் படைப்பாக தேனை சுவைக்கும் ஒரு படைப்பாக மாறுகின்றது. இது தான் மனித வாழ்வின் இறப்பும் முடிவில்லா ஆரம்பமும். இந்த ஆரம்பத்தை அடைய எம்மை இம் மண்ணக வாழ்வில் பிறருக்கு அளிக்க, அழிக்க வேண்டும்.

எனவே இந்த ஆரம்பத்தை நோக்கிய பயணமாகவே மனித வாழ்வுப் பயணம் இருக்கவேண்டும். இதற்கு உதவியாக அமைவது திருவருட்சாதனங்கள். எம் தப, செப வாழ்வு என்பது உறுதி. இவ்வாழ்வில் இவற்றை எம் அணிகலன்களாக அணிகின்ற போதுதான் புனிதர் அசீசி பிரான்சிஸ் சொல்லும் மடிவதன் மூலம்தான் முடிவில்லா வாழ்வை பெற்றுக்கொள்ள முடியும் என்பதன் உண்மைதன்மை புலனாகும்.

## நீங்காத நினைவில்
## ஓராண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 24 — 06 — 1943 | 23 — 11 — 2000 |

**அமரர் K.A. செல்வராஜா (S.K)**
(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்)

அன்பின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
வாழ்ந்த அன்பின் தெய்வமே
ஒரு வருடம் ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எங்கள் மனம்
ஆறாத்துயரோடு ஆறாத மனத்தோடும் ஏங்கும் நாங்கள்
உங்கள் ஆத்ம சாந்தி பெற
இறைஞ்சுகிறோம் இறைபதமே நிதமும் நாம்!

இவரது பிரிவால் துயருறும்
மனைவி, மகன், மாமி

54/6 கொழும்புத்துறை வீதி,
பண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

# மீட்பின் சுவடுகள் பு
## மரியாள் விரைந்து செல்கின்றாள்

**சூரியநிலா**

இறை அருளை இயல்புடனே
நிறைவாய்ப் பெற்ற கன்னிமரி
தன்னலத்தை விட்டொதுக்கி
இன்முகமே கொண்டவளாய்
எலிசபெத்தின் இல்லம் சென்றாள்
எடுத்துச் சொல்ல இறைவாக்கை!

மரியாளை கண்டதுமே
மாதவள் எலிசபேத்தும்
மட்டிலா மகிழ்ச்சி பொங்க
மரியாயே! தாயே!
இறையருளை நிறைவாய் பெற்ற
இறைமகளும் நீர்தாமே
இறை குமரன் உமதுதரம்
உறைந்திருந்து உதிப்பதனால்
உலகமது பேறு பெறும்
என்றுரைத்தாள் உவகையுடன்

என் நிலையை எப்படி நீர்
ஏற்றமுடன் அறிந்திருந்தீர்
எனக் கேட்க மரியாளும்

உமைக் கண்டு உவகையுடன்
என் குழந்தை வயிற்றினுள்ளே
எழுந்து துள்ளித் துடிக்கையிலே
உணர்ந்து கொண்டேன்
மனை தேடி எனை வாழ்த்த
மரியாயே நீர் வந்தீர்
வினையெல்லாம் நலமாக
விளைவித்த உந்தனுக்கு
என் நாள் நன்றிகளே
என்றுரைத்தாள் எலிசபேத்தும்

அருள் நிறை மாமரியாள்
ஆண்டவனை போற்றி நின்று
பொருள் பொதிய பாடுகின்றாள்
ஆண்டவரைத் தினம் போற்றி
ஆதரித்து வாழ்ந்திடுவேன்
அவர் நமக்கு செய்த நன்மை
அற்புதமே! அற்புதமே!
எளியோர்க்கு அவர் நாமம்
புனிதமாகப் புலர்ந்திடுமே
வருந்துவோர்க்கு வாழ்வளித்து
வளமூட்டிக் காக்கின்றார்
செருக்குள் செல்வரினை
செயல்களினால் கலங்கவிட்டார்
ஆபிரகாமின் குலந்தளைக்க
இஸ்ராயேலை ஆதரித்தார்

கண்களெங்கும் அவரருளே
கலந்து நிற்கும் எங்களுக்கு
கைகளதும் மெய்களதும்
அவரினையே வணங்கி நிற்கும்
தலைமுறை தலைமுறையாய்
தருகின்ற அவரிரக்கம்
மறக்கத்தான் முடிந்திடுமோ
மண்ணவர்கள் எம் மனதில்?

நல்வினைகள் செய்பவரே
போற்றி போற்றி
நமக்கு மீட்பு தரவந்தீர்
போற்றி போற்றி
இறவாத புகழ் பூத்த
இறைமகனே உமை என்றும்
மறவாது வாழ்த்தி நின்று
வாழ்ந்திடுவேன் வாழ்க! வாழ்க!
என்று பாடி மகிழ்வடைந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவின் பாசமிகு நினைவலைகள்

**22ம் ஆண்டு** | **15ம் ஆண்டு**





**ஜேம்ஸ் இராசசிங்கம்**
(கொழும்புத்துறை R.C. பாடசாலை, முன்னாள் அதிபர்)

**ஜேம்ஸ் உதயபிரசாத்**
(சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்)

1922—07—25 ⟵ தோற்றம் ⟶ 1970—05—18
1979—11—23 ⟵ மறைவு ⟶ 1986—09—08

இருபத்து இரண்டு ஆண்டுகள்
மறைந்தோடிப் போனாலும்
இனிய எம் அப்பாவே உம் நேசமுகம்
மறந்திடுமோ
நீ இறந்த நாள் முதலாய் எமக்கு
நிம்மதியும் இல்லையே
நிர்க்கதியாய் நின்றிங்கே நாமிருவர்
உனை நினைந்து
மாறாத் துயரமதில் மதிமயங்கி
வாடுகிறோம்
அப்பா ஒரு தடவை ஓடி இங்கு
வாராயோ
ஒடிந்த எம் உள்ளத்திற்கு ஒத்தடமும்
தாராயோ

என் அன்பு மகனே உதயா
உன் அன்பு முகமிழந்தோம்
ஆசை மொழி இழந்தோம்
பத்து ஐந்து ஆண்டானாலும்
பாசம் வைத்த நெஞ்சமெல்லாம்
பரிதவித்து வாடுதையா
இத்தரையில் நின் வதனம்
இனி எப்போ காண்போம் யாம்

இருவரதும் ஆன்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனை எந்நாளும் வேண்டி நிற்கும்

தங்கள் பிரிவால் வருந்தும்
அன்பு மனைவி, தாய்,
அருமை மக்கள், சகோதரிகள்

31 கார்மேல் வீதி
யாழ்ப்பாணம்

## மாணவர்களுக்கான கருத்தரங்கு

''பாடசாலைக்கு சென்று, இளைஞர்களுக்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்'' என்ற எமது ஆயர் அவர்களின் பணிப்பிற்கு இணங்க அருள் திரு சாள்ஸ் கொலின் அவர்களின் தலைமையின் கீழ் கடந்த 24ஆம் திகதி (24.10.2001) யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் மாணவர்களுக்கான கருத்தரங்கொன்று இடம்பெற்றது.

இக் கருத்தரங்கானது ''இன்றைய மாணவர்கள் நாளைய சமூகத்தில் ஆளுமையும், தனித்துவமுமிக்க மனிதராக சுதந்திரமாக செயற்பட அழைக்கப்படுகின்றனர்'' என்ற தொனிப் பொருளின் எதிரொளியாகவே அமைந்திருந்தது.

அத்தோடு தற்கால இளைஞர்கள் மதமும், மதக் கோட்பாடுகளும், தாம் எண்ணுவதை எண்ணியவாறே செய்யவேண்டும் எனத் துடிப்பதும் இன்றைய சமூகத்தில் பெருகிவருகின்றது. எனவே, கிறீஸ்தவர்களாக வாழ அழைக்கப்பட்ட ஒவ்வொரு இளைஞனும் தம்மைத் தாமே சுயமதிப்பீடு செய்து, தனது ஆளுமையை வளர்த்து, இவ் உலக சவால்களை எதிர்கொண்டு வாழ வேண்டும் என இக் கருத்தரங்கில் அறைகூவல் விடுக்கப்பட்டது.

இக் கருத்தரங்கில் அருள் திரு றொஷான், அருள் திரு எமில்போல், அருள் திரு றொனால்ட் ஜோர்ஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நிருபர்களுக்கான ஒன்று கூடல்

பாதுகாவலன் நிருபர்களுக்கான ஒன்று கூடல் இம்மாதம் 25ஆந் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு பாதுகாவலன் பணி மனையில் இடம் பெறவுள்ளதால் அனைத்து நிருபர்களையும் வரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

## கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்து மடல்கள் விற்பனைக்கு

கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்து மடல்கள் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கென விசேட விலைக் கழிவு உண்டு.

## கிறிஸ்மஸ் நாடகப் பிரதியாக்க போட்டி

எதிர்வரும் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு யாழ். திருமறைக்கலாமன்றம் நாடகப் பிரதியாக்கப் போட்டி ஒன்றை நடத்துகின்றது.

கிறிஸ்து பிறப்பை மையப் பொருளாகக் கொண்டு சமகாலத்துடன் இணைத்து 45நிமிடத்துக்குள் மேடையேற்றக்கூடியதாக பிரதிகள் ஆக்கப்பட வேண்டும் என்றும், இதற்கான முடிவுத் திகதி இம்மாதம் 20ஆம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. முதலாம் பரிசாக 2000 ரூபாவும் இரண்டாம் பரிசாக 1000ரூபாவும் மூன்றாம் பரிசாக 500ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

# அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் புதிய மாகாணத் தலைவியின் யாழ். விஜயம்

அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் புதிய மாகாணத் தலைவியாகிய அருட்சகோதரி எம். சுனித்தா அ.கா. அவர்கள் 12.08.2001ல் தனது பணிவாழ்க்கையில் 9 வருடங்களை உரோமாபுரி வாழ் மக்களுக்காகப் பணியாற்றினார். அவர் உரோமாபுரியில் பணியாற்றிக் கொண்டிருந்தாலும் யாழ். நகரில், கடந்த காலங்களாக நிலவிவரும் போர் அனர்த்தங்கள், அழிவுகள், அகதிவாழ்க்கை என்பவற்றைக் கேள்வியுற்று யாழ். நகருக்கு வந்து அந்நிலைமைகளை அறிய வேண்டும், அனுபவிக்க வேண்டும், பணிபுரிய வேண்டும் என்ற ஆர்வம் அவர் உள்ளத்தில் அடிக்கடி எழுந்துள்ளது. ஆனால், இறைசித்தம் அவரை உரோமாபுரியில் பணிவாழ்க்கையைத் தொடர அழைத்தது.

எனவே அவர் மாகாணத் தலைவியாகப் பணியேற்றதும் தனது முதல் தரிசிப்பாக யாழ். தரிசிப்பை மேற்கொண்டார். யாழ். வந்ததும் தனது நீண்ட நாள் கனவு நனவாகிய அனுபவத்தைப் பெருமகிழ்ச்சியுடன் அருட்சகோதரிகளிடம் பகிர்ந்து கொண்டார். 26.10.2001ல் யாழ். வந்த அவர் 06.11.2001 வரை யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்தார். 3 நாட்கள் யாழ். நகரிலும் 3 நாட்கள் அச்சுவேலியிலும் அருட்சகோதரிகளுக்கான தியானத்தை ஏற்படுத்தினார். அதன்பின் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களைத் தரிசித்து யாழ். நிலைமைகள் பற்றிக் கலந்துரையாடினார். குருமுதல்வர் அருட்திரு செல்வராஜா அடிகளையும் சந்தித்து உரையாடினார்.

போர் அனர்த்தங்களால் பாதிப்புற்ற மக்கள், அகதிகள் போன்றோரைச் சந்தித்து அவர்களோடு உரையாடினார். அருட்சகோதரி எம். சுனித்தா சிங்கள இனத்தைச் சேர்ந்தவராகயிருந்தாலும் தனக்குத் தெரிந்த தமிழ் வார்த்தைகளால் அவர்களுடன் உரையாடி அவர்கள் துன்ப துயரங்கள், பிரச்சினைகள், குறைகள் போன்றவற்றை அன்புடன் விசாரித்து தனது ஆறுதல் வார்த்தைகளினால் தீர்த்து அவர்களின் மனங்களைக் கவர்ந்துகொண்டார். கரவெட்டி, அச்சுவேலி ஆகிய பங்குகளுக்கும் சென்று அங்குள்ள மக்களோடு உரையாடினார். அத்தோடு போரால் அழிவுண்ட கட்டடங்கள், பாழடைந்த கட்டடங்கள், வீடுகள் போன்றவற்றையும் பார்வையிட்டார். யாழ். நகருக்கு வருகை தந்திருந்த அருட்தந்தை அலெக்சாண்டரின் சமாதானத்திற்கான கலந்துரையாடலில் பங்குபற்றினார். மடங்கள், குருமடங்கள், பணித்தளங்கள் போன்றவற்றை தரிசித்தார். அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினரால் நடாத்தப்படும் படசாலைகளைத் தரிசித்தார். அவர் தனது அருட்சகோதரிகள் சகிதம் சின்னமடு, சாட்டி ஆகிய யாத்திரைத் தலங்களுக்குச் சென்று யாழ். வாழ் மக்களுக்காகவும் அவர்கள் நிரந்தரமான அமைதி நிறைந்த சுபீட்சமான வாழ்வை அனுபவிக்கவும், சுதந்திரமாக மன அமைதியுடன் வாழவும் அன்னையாம் மரியிடம் வேண்டிக் கொண்டார்.

அவர் தன் யாழ். பணியை முடித்துக்கொண்டு 06.11.2001ல் கொழும்பு திரும்பினார். இவர் பணி சிறக்க யாழ். சமூகம் வாழ்த்தி நிற்கிறது.

## ஆயர்களின் வாழ்வு பணி பற்றிய ஆய்வு

உலகின் பல பாகங்களிலுமிருந்து 200க்கு மேற்பட்ட ஆயர்கள் வத்திக்கானில் ஒன்றுகூடி, தமது அன்றாட வாழ்வுக்கு மிக நெருக்கமாக விடயமான ''திருச்சபையில் ஆயர்களின் பணி'' பற்றி ஆராய்ந்தனர். இந்த ஆயர் சங்கம் செப்டெம்பர் 30ஆம் திகதி யிலிருந்து அக்டோபர் 27ஆம் திகதி வரை நடைபெற்றது. இக் கூட்டங்களுக்கு திருத்தந்தை 2ஆம் ஜோண் பவுல் தலைமை வகித்தார். உரைகள் குழு ஆய்வுகளின் பின் இறுதித் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இது ஆயர் சங்கத்தின் 10வது கூட்டமும், உலகின் 4500 ஆயர்கள் பங்குபற்றிய 2வது கூட்டமுமாகும். ''உலகின் நம்பிக்கைக்காக யேசு கிறிஸ்துவின் நற்செய்திப் பணியாளர் ஆயர்'' ஆயர்களின் தனித்துவம், அது விசுவாசிகளினால் எவ்வாறு நோக்கப்படுகிறது என்பதில் அதிககவனம் செலுத்தப்பட்டது. ஒரு தந்தையைப் போல் ஆட்சி செய்யவும் அதிகாரத்தில் மட்டுமல்லாது நற்செய்தியை வாழ்வதிலும் ஏழை, எளியவர்களுக்கு அன்பு காட்டுவதிலும் அப்போஸ்தலர்களைப் பின்பற்றுமாறு அது அழைக்கின்றது.

# யாழ். மறைக்கல்வி நடுநிலைய செய்திகள்

## மறைக்கல்வித் தேர்வு

யாழ்ப்பாணம், தீவகம், வடமராட்சி, தென்மராட்சி மறைக் கல்வித் தேர்வு இடம்பெற்றது. மதிப்பீட்டுப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 5ஆம் ஆண்டு தொடக்கம் 11ஆம் ஆண்டுவரை பயிலும் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட கத்தோலிக்க மாணவர்கள் இத் தேர்வில் பங்குகொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கான புள்ளிகள் கூடிய விரைவில் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

## கருத்தரங்குகள்

வடமராட்சி திருஇருதயக் கல்லூாரியில் ஐப்பசி 26, 27ஆம் திகதிகளில் 8,9,10,11ஆம் ஆண்டுகளில் கிறிஸ்தவம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மறுசீரமைக்கப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்ட பாடநூல்களின் உள்ளீடுகள் பற்றிய கருத்தரங்கு நடாத்தப்பட்டது. 16 ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிலைய இயக்குனர் அருள்திரு ஆர்.சி.எக்ஸ். நேசராஜா, மறையாசிரியர் எஸ்.எவ். சவுந்தரம், அருள்தந்தையர்கள் ஜெபரட்ணம், பிலேந்திரன் ஆகியோர் கருத்தரங்கை நெறிப்படுத்தி வழிநடத்தினர்.

* * * *

''நீ சமாதானத்தின் கருவியாக...'' என்ற மையப்பொருளில் 140 மறையாசிரியர்கள் பங்கு கொண்ட அரைநாள் கருத்தரங்கு மனித முன்னேற்ற நிலைய அனுசரணையுடன் ஐப்பசி 28ல் நடாத்தப்பட்டது. அருள் திரு அலெக்சாந்தர், அருட் சகோதரி பற்றிமா அ.கா. ஆகியோர் வழிநடத்தினர். அன்றைய நாள் பி.ப. 6.30 தொடக்கம் இரவு 12.30 வரை இறைபிரசன்ன தியான செபம் இடம்பெற்றது. அருட்தந்தையர்கள் மைக்கல் சவுந்தரநாயகம், ஜெபரட்ணம், றெக்ஸ் சவுந்தரா ஆகியோர் இறைஅனுபவத்தைப் பெறும் பக்திநெறியில் வழிநடத்தினர்.

* * * *

நவம்பர் 2,3ஆம் திகதிகளில் யாழ். கல்விப் பணிமனை மண்டபத்தில் 8,11ஆம் ஆண்டு கிறிஸ்தவம் றோ.க. கற்பிக்கும் யாழ். மாவட்டத்தை உள்ளடக்கிய ஆசிரியர்களுக்கு இவ்வாண்டுக்கான பாடநூல் விளக்கக் கருத்தரங்கு இடம்பெற்றது. இயக்குநர் தந்தையோடு அருட்தந்தையர்கள் பிலேந்திரன், ஜெயசேகரம், மறையாசிரியர் சவுந்தரம் ஆகியோர் வழிநடத்தினர். கிறிஸ்தவம் றோ.க. முதன்மை ஆசிரியர் நெறிப்படுத்தினார். 50 ஆசிரியர்கள் பங்குபற்ற வசதியிருந்தும் ஏறக்குறைய 30 ஆசிரியர்களே பங்குபற்றி பயனடைந்தனர்.

## தேசிய மறையாசிரியர் தேர்வு

தேசிய மறைஆசிரியர் 2,3ஆம் ஆண்டு தேர்வு எழுதும் மாணவர்களுக்கான ஆயத்த வகுப்புகள் நடுநிலையத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 64 பரீட்சார்த்திகள் விண்ணப்பித்திருக்கின்றார்கள். நடுநிலையம் நடாத்தும் இவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை இம் மாதம் 10ஆம் திகதியும், இறுதி எழுத்துப் பரீட்சை 17ஆம் திகதியும் இடம்பெறும்.

## க.பொ.த. (சா/த) மீட்டல் வகுப்பு

நவம்பர்30, டிசம்பர் 01 ஆகிய தினங்களில் மேற்படி மீட்டல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளது.

## புனித மடுத்தீனார் சிறிய குருமட பாதுகாவலர் தினம்

புனித மடுத்தினார் சிறிய குருமட மாணவர்கள் தமது புனிதரின் விழாவினை கார்த்திகை மாதம் 11ஆம் திகதி வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். காலை 7 மணியளவில் ஆயர் தலைமையில் திருவிழாத் திருப்பலிஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்திருப்பலியிலே ஆயர் தனது மறையுரையிலே "தாழ்மையும் ஏழ்மையும் உடைய மடுத்தீனார் செல்வம் மிக்க மனிதனாக விண்ணகம் சென்றார். அவரது இவ் முன்மாதிரியான வாழ்வினை நாமும் பின்பற்றி விண்ணகத்திலே செல்வமுடையவர்களாக திகழவேண்டும். அத்துடன் மடுத்தீனாரிடம் சிறந்து விளங்கிய சேவை மனப்பாங்கு எங்களிடமும் மிகச் சிறப்பாக மிளிர வேண்டும்" என்றார். இத்திருப்பலியிலே இளைப்பாறிய யாழ் ஆயர் வ. தியோகுப்பிள்ளை அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இவ் விழாவில் கலை நிகழ்ச்சிகள், உதைப்பந்தாட்டப் போட்டிகள் என்பன இடம் பெற்று விழா மாலையில் இனிதே நிறைவுற்றது.

## தென்னிலங்கை கலைஞர்கள் யாழ் வருகை

யாழ் திருமறைக் கலாமன்றத்தின் கலைப்பாலம் 2001 நிகழ்ச்சி ஏற்பாட்டின் தென்னிலங்கை, பாணந்துறை, திருமறைக் கலாமன்றத்தைச் சேர்ந்த நாற்பதுக்கும் அதிகமான சிங்களக் கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகளை வழங்குவதற்காக இம்மாதம் 13ஆந் திகதி யாழ் வந்துள்ளனர்.

மன்ற பொதுச் செயலாளர் ஜோண்சன் ராஜ்குமார் மன்ற இயக்குநர் நீ. மரிய சேவியர் அடிகள் மூத்த கலைஞர் G.P. பேர்மினஸ் உட்பட பலரும் இவர்களை வரவேற்று உரையாற்றினார்கள். சிங்களக் கலைஞர்களின் பாடல்கள் உரைகள் இடம் பெற்றன.

இனப்போர் தீவிரமடைந்த 1980களின் பின்னர் கலை நிகழ்ச்சிகளை வழங்குவதற்கு யாழ்ப்பாணத்திற்கு சகோதர இனக் கலைஞர்கள் வருகை தந்துள்ளது இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத் தக்கது.

இம்மாதம் 20ம் திகதி வரை ஒரு வார காலத்திற்கு யாழ் நகரில் தங்கி நிற்கவுள்ள இவர்கள் குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிங்கள பாரம்பரிய கலை வடிவங்கள் உட்பட பல நிகழ்ச்சிகளையும் நிகழ்த்திக் காட்டவுள்ளனர்.

இம்மாதம் 14ஆந் திகதி மன்ற அரங்கிலும், 16ஆந் திகதி யாழ் வேம்படி மகளிர் கல்லூரியிலும், 17ஆந் திகதி பருத்தித்துறை வட இந்துக் கல்லூரியிலும், 18ஆந் திகதி காலையில் மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியிலும், மாலையில் மருதனாமடம் இராமநாதன் கல்லூரியிலும் நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

இப் பத்திரிகை பாதுகாவலன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360 பிரதான வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 2001ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது. P.197. T.P. No. 2378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org